578

பொதிகைத்
தமிழ்ப்பாடப் புத்தகம்

மூன்றாம் வகுப்பு

578
3 61

...ஷிங் கம்பெனி, சென்னை-1

TB
O-,6(3)
N61
145964

பொதிகைத்
தமிழ்ப் பாடப் புத்தகம்

மூன்றாம் வகுப்பு

[1958-ம் வருட பாடத் திட்டப்படி]

வித்துவான் ப. ஆறுமுகப்பெருமாள்
தலைமைத் தமிழ் ஆசிரியர்
ம. தி. தா. இந்து உயர் கலாசாலை,
திருநெல்வேலி.

வித்துவான் A. மாடசுவாமி
தமிழ் ஆசிரியர், நாகர்கோவில்.

அலைய்டு பப்ளிஷிங் கம்பெனி
பிலிப்ஸ் தெரு :: சென்னை-1.

[விலை 60 ந. பை.

முதற் பதிப்பு-பிப்		1958.
மறு பதிப்பு-மே.		1958.
,,	ஜூலை	1958.
,,	மார்ச்சு	1959.
,,	ஜனவரி	1960.
,,	மார்ச்	1961.
,,	ஜூன்	1961.

பாடப் புத்தகக் கமிட்டி அங்கீகரித்தது
பக்கம் 3, கெஜட் 28—5—'58.

~~24 lbs~~. பேப்பரில் அச்சிடப்பட்டது.

ஷண்முகம் பிரஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-1.

முன்னுரை

இப் புத்தக வரிசை ஒன்று இரண்டு மூன்று வகுப்புகளுக்கு, புதிதாகச் சென்னைக் கல்வி இலாகா வெளியிட்டிருக்கும் பாடத் திட்டத்தைத் தழுவி எழுதப்பட்டிருக்கிறது. சிறு பிள்ளைகளுக்குப் படங்களைப் பார்ப்பதிலேயே விருப்பம் இயற்கையாகச் செல்லும். ஆகையால் முதற் புத்தகத்தில் சிறுவர்கள் வீட்டிலும், சுற்றுப் பக்கங்களிலும் பார்த்தும், கையாடியும் பழகியுள்ள பொருள்கள் பட ரூபமாக முதலில் காட்டப்பட்டிருக்கின்றன. இதில் சிறுவர்கள் படத்தோடு எழுத்துக்களையும் கவனிக்கிறார்கள். பின்னர் அவர்கள் படித்த வார்த்தைகளை எழுதுவதற்குப் பழகுதல் வேண்டும். இறுதியில் சில எளிய பாடங்களும், பாட்டுகளும் அமைக்கப் பட்டிருக்கின்றன.

சொற்களைத் தெரிந்து வாக்கியங்களை அமைத்துப் பழகுவதற்கு இலக்கணம் இன்றியமையாததன்றோ. பிழையறப் பேசவும் எழுதவும் பயிற்றுவிக்கும் நூல் இலக்கணம். மாணவர்கள் பிழையறப் பேசவும் எழுதவும் பயிற்சிபெறும் நோக்கத்தோடு இந்த மூன்றும் புத்தகத்தில் தக்க முறையில் இலக்கண விளக்கங்களும் பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன.

ஆகவே, இப்புத்தகங்கள் மாணாக்கர்களுக்கு நமது கல்வித்துறை அறிஞர்கள் கொடுக்க விரும்பும் மொழிப் பயிற்சியை எளிதில் கொடுக்குமென்று நம்புகின்றோம்.

ஆக்கியோர்.

பொருளடக்கம்

		பக்கம்
1.	வீடு	7
2.	வாழை	10
3.	மூன்று நண்பர்கள்	15
4.	நகை அணிதல்	19
5.	கேடு செய்தார் கேடு அடைவர்	24
6.	தென்னை மரம்	27
7.	மூக்கறையன் கதை	30
8.	பாடம் வாசித்தல்	35
9.	மீன்கள்	39
10.	உண்மை பேசிய உத்தமன்	43
11.	நூல் நூற்றல்	47
12.	இராட்டினப் பாட்டு	52
13.	இரயில் வண்டி	54
14.	நெற்பானையும் எலியும்	58
15.	தாய் எலியின் சொல் கேளாத குட்டி எலி	60
16.	மூச்சு விடுதல்	63
17.	தாலாட்டு	67
18.	கவிமணி	69
19.	நிறுத்துக் குறிகள்	73
20.	கையெழுத்து	76
21.	ஈ	79
22.	பறவைக் கூடு	83
23.	மழை	86
24.	மழையின் சிறப்பு	91
25.	கோழி வளர்த்தல்	93
26.	நோயற்ற வாழ்வு	99
27.	வெ. ப. சுப்பிரமணிய முதலியார்	103
28.	தைப் பொங்கல்	108
29.	வானொலி (அல்லது) ரேடியோ	109
30.	ஔவையாரும் அதியமானும்	113
	வெற்றி வேற்கை	
	வாக்குண்டாம்	

நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே...ஜயஹே...ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

வணக்கப் பாடலின் பொருள்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.
நின் திருநாமம் பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.
அது விந்திய ஹிமாசல மலைகளால் எதிரொலிக்கிறது.
யமுனை கங்கை நதிகளின் இன்பநாதத்தில் கலக்கிறது.
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன.

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி! வெற்றி! வெற்றி!



பழைய முறையில் கட்டப்பட்ட வீடு



புதிய முறையில் கட்டப்பட்ட வீடு

பொதிகைத்

தமிழ்ப் பாடப் புத்தகம்

மூன்றும் வகுப்பு

1. வீடு

பழைய முறை	புதிய முறை	அவசியமானது
காண்பது	இடைகழி	மாளிகை
அரிது	தாழ்வாரம்	சிறந்தது
வசதிகள்	பகுதிகள்	முற்றம்

1. பிள்ளைகளே, முன்பக்கத்தில் காட்டியுள்ள படங்களில் நீங்கள் இரண்டு விதமான வீடுகளைப் பார்க்கிறீர்கள். ஒன்று பழைய முறையில் கட்டி இருக்கும் வீடு; மற்றது புதிய முறைப்படி அமைந்திருக்கும் வீடு. பழைய வீடுகளுக்கெல்லாம் முன் வாசலில் திண்ணைகள் உண்டு. புதிய வீடுகளில் இப்படிப்பட்ட திண்ணைகளைக் காண்பது அரிது.

2. பழைய முறையில் கட்டின வீடுகளில் அறைகள் சிறியனவாயிருக்கும். அவற்றில் சன்னல் இருக்கமாட்டாது. இதனுல் காற்றேட்டம் குறைவாகவே இருக்கும். இப்பொழுது புதிதாகக் கட்டும் வீடுகளில், காற்றேட்டத்திற்கு வேண்டிய

வசதிகளோடு, அறைகளெல்லாம் அமைக்கப்படுகின்றன.

3. சாதாரண வீடுகளில் முன் பக்கத்தில் இருப்பது வாசற்படி, வீட்டிற்குள் முற்றம், இடைகழி, தாழ்வாரம், சமையல் அறை முதலிய பகுதிகள் உண்டு. புதிய முறைப்படி அமைக்கும் வீடுகளில் படுக்கை அறை, குளிக்கும் அறை முதலிய அறைகளும் உண்டு. சில வீடுகளுக்குப் பின்புறத்தில் மாட்டுத்தொழுவம் கட்டுவதும் வழக்கம்.

4. நாம் குடியிருக்கும் வீட்டிற்குச் சுத்தமான காற்று அவசியமானது என்பதை ஒருபொழுதும் மறந்துவிடலாகாது. சுத்தக் காற்றைப்போல், சூரிய வெளிச்சமும் நல்ல தண்ணீரும் மிகவும் அவசியமானவை. காற்றும், வெளிச்சமும் தாராளமாக வரும் ஒரு குடிசையானது இவை இரண்டும் இல்லாத ஒரு மாளிகையைக் காட்டிலும் சிறந்தது.

5. வீடுகளையும் சுற்றுப் பக்கங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். கிராமங்களில் வசிப்பவர்கள் தங்கள் வீடுகளில் சேரும் குப்பைகளைப் போட, வீட்டிற்குத் தூரத்தில் குழிகளை வெட்டிக் கொண்டு அவற்றில் போட்டு வரவேண்டும்.

அக்குப்பைகளை அப்போதுக்கப்போது கொளுத்திவிட வேண்டும்; அல்லது புதைத்துவிட வேண்டும். பட்டணங்களில் வசிப்போர் வீட்டுக் குப்பைகளைத் தெருக்களில் வைக்கப்பட்டிருக்கும் குப்பைத் தொட்டிகளில் போட வேண்டும். நகரத்தைச் சுத்தப்படுத்துவோர் அவற்றை அப்புறப்படுத்துவார்கள். வீடுகளும் அவற்றைச் சுற்றியுள்ள இடங்களும் சுத்தமாக இருந்தால் நாம் சுகம் பெற்று வாழலாம்.

கேள்விகள்

1. பழைய முறையில் கட்டியிருக்கும் வீடுகளில் காற்றோட்டம் ஏன் குறைவாக இருக்கும்?
2. எவ்விதமான குடிசை ஒரு மாளிகையைவிடச் சிறந்தது?
3. நாம் சுகம் பெற்று வாழ வீடுகளை எவ்விதம் வைத்துக்கொள்ள வேண்டும்?

பயிற்சி

கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய் :—

1. பழைய முறையில் கட்டப்பட்ட வீடுகளுக்கு முன் வாசலில்————உண்டு. (முற்றம், திண்ணை, சமையல் அறை)
2. பழைய முறையில் கட்டப்பட்ட வீடுகளில் அறைகள்——இருக்கும். (சிறியனவாக, பெரியனவாக.)
3. பழைய முறை வீடுகளில் காற்றோட்டம்———இருக்கும். (அதிகமாக, குறைவாக.)
4. சில வீடுகளில்————மாட்டுத் தொழுவம் இருப்பது உண்டு. (பின் புறத்தில், முன்புறத்தில்.)

2. வாழை

தித்திப்பாக	கறி	இவ்விதம்
குழி	ஒழுங்காக	மாதம் ஒரு முறை
குருத்து	உரித்து	சீப்புச் சீப்பாக
அகன்று	காற்று மோதி	

1. வாழை மரம் மிகவும் உபயோக மானது. வாழை இலையில் நாம் சாப்பிடு கிறோம். வாழைப் பழம் தித்திப்பாக இருக் கும். இதைச் சாப்பிடுவது உடல் நலத்திற்கு நல்லது. வாழைக் காயைக் கறி சமைத்து சாப்பிடுகிறோம். இவ்விதமாகவே வாழைத் தண்டும் வாழைப்பூவும் கறிக்கு உபயோகம் ஆகின்றன.

2. இவ்வாறு உபயோகமுள்ள வாழை மரத்தை நாம் தோட்டங்களில் வைத்து வளர்க்கிறோம். நமது நாட்டில் இது செழிப் பாக வளர்கிறது. வாழை மரத்திற்கு விதை இல்லை. ஆழமாகக் குழி தோண்டி வாழைக் கன்றை நடுகிறார்கள். இதற்கு உரம் வைத்து ஒழுங்காகத் தண்ணீர் பாய்ச்சுதல் வேண் டும். மாதம் ஒரு முறை மரத்தைச் சுற்றிக் கொத்திக் கொடுக்க வேண்டும். வாழை குருத்துவிட்டு வளர்ந்து வருகிறது. குருத்து பெரியதாகிப் பிரிந்து இலையாகும். வாழை மரம் பருத்து வளர்ந்ததும், அதன் அடியில் கன்றுகள் தோன்றுகின்றன.

3. வாழை மரத்திற்குக் கிளைகள் இல்லை. வாழைப்பட்டைகள் அம்மரத்தில் ஒன்றின் மேல் ஒன்றாக இருக்கும்; பட்டைகளுக்கு உள்ளே தண்டு இருக்கும்; பட்டைகளை உரித்துத் தண்டு எடுப்பார்கள். முழு வளர்ச்சி அடைந்ததும், வாழை மரம் குலை தள்ளும். ஒரு வாழை மரம் ஒரு முறைதான் குலை தள்ளும். குலை தள்ளுவதற்கு முன் ஒரு சிறிய இலை தோன்றும். அந்த இலைக்கு '**கண்ணாடி இலை**' என்று பெயர்.

4. அதற்குப் பின் பூ வெளிவரும். அதன் மேலே பல தோல்கள் மூடிக்கொண் டிருக்கும். தோல்கள் விரிந்தவுடன் அதனுள்

காய்கள் சீப்புச் சீப்பாகத் தோன்றும். காய் முற்றிப் பழம் ஆகும். காயின் வெளித்தோல் பச்சை நிறமாக இருக்கும்; பழம் மஞ்சள் நிறமானது. குலை முற்றினவுடன் அதை அறுத்து விற்பதற்குக் கொண்டு போவார்கள். குலையை அறுத்தவுடன் மரத்தையும், வெட்டி விடுவார்கள். பின்பு, பக்கக் கன்றுகள் மரங்களாக வளரும்.

5. வாழை இலை நீண்டு அகன்று இருக்கும். இலையின் நடுவில் நரம்பு ஒன்று உண்டு. வாழை இலைகளின் பச்சை நிறம் கண்ணிற்குக் குளிர்ச்சியாக இருக்கும். காற்றுமோதி இலைகளைக் கிழிப்பதற்கு முன் வாழை மரம் பார்வைக்கு அழகாக இருக்கும்.

6. வாழையில் செவ்வாழை, பச்சை வாழை, இரசதாளி, மொந்தன், பேயன், பூவன், கதலி எனப் பலவகை உண்டு. வாழை மரம் சாதாரணமாக வெப்பமான இடங்களில் உண்டாகும்.

கேள்விகள்

1. வாழை மரம் நமக்கு எவ்விதங்களில் உபயோகப்படுகின்றது?
2. வாழை மரத்தை எவ்விதம் பயிரிடுகிறார்கள்?
3. 'கண்ணாடி இலை' என்று எதற்குப் பெயர்?

4. வாழையின் குலையை அறுத்தவுடன் மரத்தை என்ன செய்வார்கள் ?

5. வாழையின் சில வகைகளைச் சொல்லு.

பயிற்சி

பொருள் வேறுபாடு தெரிய வாக்கியங்களில் அமைத்துச் சொல் :—

குழி, குளி; தோல், தோள்; உரி, உறி.

கீழ்க்கண்டவைகளில் பொருத்தமானவற்றை உபயோகித்து காலி இடங்களை நிரப்பவும்.

ஒரு முறை தான், ஒழுங்காக, மாதம் ஒரு முறை, உண்டு, ஒன்றின் மேல் ஒன்றாக, இல்லை.

1. வாழைக்கு உரம் வைத்து———தண்ணீர் பாய்ச்சுதல் வேண்டும்.

2. ———வாழை மரத்தைச் சுற்றிக் கொத்திக் கொடுக்க வேண்டும்.

3. வாழை மரத்திற்குக் கிளைகள்———.

4. ஒரு வாழை மரம்———குலை தள்ளும்.

5. வாழை இலையின் நடுவில் நரம்பு ஒன்று———.

எங்கள் வாழைத் தோட்டம்

மௌன வாசிப்பு

பயிற்சி

என் பெயர் மாணிக்கம். என் தகப்பனார் ஒரு வாழைத் தோட்டம் போட்டிருக்கிறார். அதில் சுமார் எண்ணூறு வாழை மரங்கள் இருக்கின்றன. வாழைகள் வரிசை வரிசையாக நிற்கின்றன. என் தகப்பனார் தினந் தோறும் வாழைத்தோட்டத்திற்குப் போகிறார்; தண்ணீர் இறைக்கிறார். நான் சில சமயங்களில் என் தகப்பனாருடன் வாழைத் தோட்டத்திற்குப் போவது உண்டு. ஒரு வாழை மரம் ஒரு முறைதான் குலைதள்ளும். குலைகள் முற்றினதும் அவைகளை என் தகப்பனார் வெட்டி வண்டியில் ஏற்றிச் சந்தைக்குக் கொண்டு போவார்; அங்கு அவைகளை விற்பார்.

கேள்விகள்

1. மாணிக்கத்தின் தகப்பனார் என்ன தோட்டம் போட்டிருக்கிறார்?

2. அதில் சுமார் எத்தனை வாழை மரங்கள் இருந்தன?

3. தினந்தோறும் மாணிக்கத்தின் தகப்பனார் என்ன செய்வார்?

4. குலைகள் முற்றினதும் அவர் என்ன செய்வார்?

கீழ்க்கண்ட ஒவ்வொரு வாக்கியத்தையும் தினந் தோறும் என்று ஆரம்பித்துப் படி:—

1. தகப்பனார் வாழைத் தோட்டத்திற்குப் போகிறார்.
2. தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்சுகிறார்.
3. வாழைக் குலைகளை வெட்டுகிறார்.
4. குலைகளை வண்டியில் ஏற்றுகிறார்.
5. குலைகளைச் சந்தையில் விற்கிறார்.

மேற்கண்ட வாக்கியங்களில் நேற்று என்று ஆரம்பித்து எழுது. நாளை என்று ஆரம்பித்து எழுது.

3. மூன்று நண்பர்கள்

மாலை	மறைவிடம்	புகன்றது
உற்று நோக்கி	தோழர்	பொழுது புலர்வதற்கு
உறுதி	கவலை	உலாவி வந்தன

1. ஒரு சிறிய குளத்தில் பல மீன்கள் சுகமாக வசித்து வந்தன. அவற்றுள் **வரும் முன் காப்போன், வருங்கால் காப்போன், வந்தபின் காப்போன்** என்ற மூன்று மீன்களும் நண்பர்களாக வாழ்ந்து வந்தன. ஒரு நாள் மாலையில் அந்த மூன்று மீன்களும் தண்ணீரில் அங்கு மிங்கும் நீந்திச் சென்று, துள்ளிக் குதித்து விளையாடிக் கொண்டிருந்தன.

2. அச்சமயம் அங்கு இரண்டு செம்படவர்கள் வந்தார்கள். அவர்கள் குளத்தினுள் உற்று நோக்கினர்கள். "இந்தக் குளத்தில் ஏராளமான மீன்கள் வசிக்கின்றன; நாளை நாம் இங்கு வந்து வலை வீசி மீன்களைப் பிடிக்க வேண்டும்" என்று சொல்லி அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

3. செம்படவர்கள் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த அந்த மூன்று மீன்களும் திகிலடைந்தன. செம்படவர்களிடமிருந்து தப்பிப் பிழைக்க யாது செய்யலாம் என்று யோசிக்கலாயின.

4. **வரும்முன் காப்போன் :** "சிநேகிதர்களே! நாளை இங்குச் செம்படவர்கள் வந்து வலை வீசி மீன்களைப் பிடிப்பது உறுதி. ஆதலால் நாம் அவர்கள் வருவதற்கு முன் ஒரு மறைவிடம் தேடி ஒளிந்து கொள்ள வேண்டும்" என்று சொன்னது.

5. **வருங்கால் காப்போன் :** "தோழர்களே! செம்படவர்கள் வரும் போதல்லவா நாம் தப்பிப் பிழைக்க வழி தேடவேண்டும். ஆபத்து வருவதற்கு முன்னதாகவே நாம் அதைப்பற்றி நினைத்து வருந்துவதில் பயன் என்ன?" என்று கூறியது.

6. **வந்தபின் காப்போன் :** "அன்பர்களே! செம்படவர்கள் நாளை வருவார்களோ, வரமாட்டார்களோ? நாளை நடக்கப் போவதை யார் அறிவார்? ஆதலின், வீணில் நாம் கவலை கொள்ள வேண்டாம். செம்படவர்கள் வந்து வலை வீசிய பிறகு உயிர் தப்பும் வழியைத் தேடலாம்" என்று புகன்றது.

7. மறுநாள் பொழுது புலர்வதற்கு முன்பாகவே **வரும்முன் காப்போன்** எழுந்து குளத்தின் ஒரு மூலையிலிருந்த பாறைகளின் இடுக்கில் ஒளிந்து கொண்டது. வருங்கால் காப்போனும், வந்தபின் காப்போனும் "வரும்முன் காப்போன் ஒரு பயங்கொள்ளி" என்று ஏளனம் செய்து கொண்டு நீரில் உலாவி வந்தன.

8. செம்படவர்கள் தாம் முந்தின நாள் தீர்மானித்துக் கொண்டபடி வலைகளுடன் குளத்திற்கு வந்தனர். அவர்களைக் கண்ட வுடன் வருங்கால் காப்போன் நடுநடுங்கியது; உயிர் தப்ப என்ன செய்யலாம் என்று அங்குமிங்கும் ஓடியது. கடைசியில் வரும் முன் காப்போன் ஒளிந்திருந்த இடத்திற்கு வந்து அங்கு ஒளிந்து கொண்டது.

9. வந்தபின் காப்போன், 'செம்படவர்கள் வலை வீசும்பொழுது எவ்விதமும் தப்பித்துக்கொள்ளலாம்' என்று நினைத்துச் சும்மா இருந்தது.

10. செம்படவர்கள் நீரில் இறங்கி வலைகளை வீசிப் பல மீன்களைப் பிடித்தார்கள். ஐயோ, பாவம்! வந்தபின் காப்போன் தப்ப வழியில்லாமல் ஒரு வலையில் அகப்பட்டுக் கொண்டது. செம்படவர்கள் வலைகளில் அகப்பட்ட மீன்களை எடுத்துக் கூடைகளில் போட்டுக்கொண்டு தத்தம் வீடுகளுக்குச் சென்றார்கள்.

11. பிள்ளைகளே! இந்த மூன்று மீன் களில் எது புத்தியுள்ளது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ஆபத்து நேரிடும் என்று தெரிந்திருந்தும் வந்தபின் காப்போன் தப்பு வதற்கான வழியைத் தேடிக்கொள்ளாதது என்னே மதியீனம் பாருங்கள்! ஆபத்து

நேரிடும் என்று தோன்றும் காலங்களில் வரும்முன் காப்போனைப் போன்று முன் எச்சரிக்கையாக இருந்தால் மட்டும் சுகமாக வாழலாம்.

கேள்விகள்

1. குளத்தில் வசித்து வந்த மூன்று மீன்களின் பெயர்கள் என்ன ?

2. ஒரு நாள் மாலையில் செம்படவர்கள் வந்து என்ன பேசிக்கொண்டார்கள் ?

3. வரும்முன் காப்போனும் வருங்கால் காப்போனும் எவ்விதம் உயிர் தப்பினர் ?

4. வந்தபின் காப்போன் கதி என்ன ஆயிற்று ?

பயிற்சி

பின் வரும் ஒவ்வொரு இணை வாக்கியங்களையும் ஒன்று சேர்த்து எழுது :—

1. செம்படவர்கள் வலைகளை வீசினார்கள்.
   அவர்கள் மீன்களைப் பிடித்தார்கள்.
2. நான் கடைக்குப் போனேன்.
   நான் கடையில் புத்தகம் வாங்கினேன்.



4. நகை அணிதல்

சடங்கு	சந்தேகம்	அணி
தோற்றம்	மூளி	கண்டிக்கிறார்
ஏமாற்றி	வெறுக்கிறார்	நினைவு
கால்நடையாக	காதணி	வழிமறித்து
பட்டாடை	தேவை	கட்டாயம்

கமலம் : வள்ளி, நாளை என் தம்பிக்குக் காது குத்தும் சடங்கு நடைபெறப் போகிறது. தஞ்சாவூரிலிருந்து என் மாமா, அத்தை, குழந்தைகள் எல்லோரும் வந்திருக்கிறார்கள். நாளை விருந்து நடைபெறும். ஆகையால், காது குத்தும் சடங்கைப்

பார்க்கவும், விருந்துச் சாப்பாட்டிற்கும் நீ நாளை எங்கள் வீட்டிற்கு வரவேண்டும். அதிகாலையிலேயே வந்துவிடு எல்லோரும் மகிழ்ச்சியுடன் நேரம் போக்கலாம்.

வள்ளி: கமலம், எனக்கு ஒரு சந்தேகம். ஆண் குழந்தைகளுக்கு ஏன் காது குத்த வேண்டும்?

கமலம்: என்ன வள்ளி, இப்படிக் கேட்கிறாய்? நாம் எல்லாம் காது குத்திக் கொண்டு கம்மல், தொங்கட்டான் முதலியன அணிந்து கொள்ளவில்லையா? இவைகளை அணிந்து கொண்டால் அழகான தோற்றம் ஏற்படுகிறது. காதில் ஒன்றும் அணியாமல் மூளியாக இருந்தால் அழகாக இருக்கிறதா? சொல். எங்கள் தாத்தா கூடக் காதில் கடுக்கன் அணிந்துகொண்டிருக்கிறார். அது அழகாகத்தான் இருக்கிறது. கடுக்கன் போட்டுக் கொள்வதற்காகத்தான் ஆண் குழந்தைகளுக்கும் காது குத்துகிறார்கள்.

வள்ளி: கமலம், உன் தம்பிக்கு ஏதாவது நகைகள் போட்டிருக்கிறீர்களா?

கமலம்: ஆம், இடுப்பில் அணியத் தங்கத்தால் செய்யப்பட்ட அரைஞாண், கழுத்தில் போடச் சங்கிலி, கைக்குக் காப்பு கள், விரலில் அணிய மோதிரம் முதலியவை போட்டிருக்கிறோம். அது இருக்கட்டும்

வள்ளி, உன் தகப்பனுர் மாதம் ஐந்நூறு, அறுநூறு ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கு கிருரே, உனக்கு ஏன் நகைகள் செய்து போடவில்லை?

வள்ளி : நகைகள் அணிவதை எங்கள் அப்பா வெறுக்கிருர்; கண்டிக்கிருர். நகைகள் அணிந்து கொண்டால் எப்பொழுதும் பயந்து கொண்டே இருக்க வேண்டியதாகும். தவிர, சிறு குழந்தைகளுக்கு நகைகள் போட்டு வைத்தால் குழந்தையின் உயிருக்கே மோசம் வந்துவிடும். எத்தனையோ இடங்களில் திருடர்கள் குழந்தைகளை ஏமாற்றி அழைத்துக் கொண்டுபோய் நகைகளைக் கழற்றிக்கொண்டு அக்குழந்தைகளை அங்கங்கே விட்டுச் சென்றிருக்கிருர்கள். ஆகையால் குழந்தைகளுக்கு நகையே போடக்கூடாது என்று எங்கள் தகப்பனுர் சொல்லுகிருர். ஆகையால்தான் எனக்கு நகைகள் செய்து போடவில்லை. எனக்கும் நகைகள் அணிந்து கொள்ள ஆசையில்லை.

கமலம் : வள்ளி, உன் அப்பா சொல்வது உண்மைதான். நகைகள் அணிந்து கொண்டு வெளியே போவதென்ருல் பயமாகத்தான் இருக்கிறது. முன்பு ஒருநாள் எங்கள் பாட்டி சொன்னது இப்பொழுது நினைவுக்கு வருகிறது. ஒரு சமயம் இரண்டு பெண்கள் கால் நடையாக ஊருக்குப்

போய்க் கொண்டிருந்தார்களாம். அவர்கள் இருவரும் காதுத் துளைகளை வளர்த்து காதணிகள் அணிந்திருந்தார்கள். ஒரு திருடன் அவர்களை வழிமறித்து, அவர்களு டைய காதணிகளைக் கழற்றிக்கொண்டு அவ் விருவருடைய காதுகளையும் சேர்த்து ஒரு பூட்டைப் பூட்டி விட்டானும். அவ்விருவரும் மிகுந்த துன்பத்துடன் நடந்து சென்று, ஊரை அடைந்து பூட்டைக் கழற்றிக் கொண்டார்களாம். என்ன அநியாயம் பார்!

வள்ளி: இந்த மட்டாவது காதை அறுக் காமல் நகையை மட்டும் கழற்றிக்கொண்டு சென்றுனே! எத்தனை இடங்களில் காதறுப் புத் திருட்டுகள் நடைபெறுகின்றன?

கமலம்: வள்ளி, நகைகள் அணிந்து கொள்ளாவிட்டால் அழகாய் இராதுபோலி ருக்கிறதே! அதற்கு என்ன செய்யலாம்?

வள்ளி: 'ஆடை பாதி ஆள் பாதி' என்றபடி சுத்தமான ஆடைகளே அழகைத் தரப் போதுமானவை. தேகத்தைச் சுத்த மாக வைத்துக்கொண்டு, தலையை ஒழுங் காகச் சீவி, சுத்தமான உடைகளை அணிந்து வருவதே போதுமானவை. மற்றபடி நகை கள் எதுவும் தேவையில்லை.

கமலம்: வள்ளி, நீ சொல்வது உண்மை தான்; பட்டாடைகள் உடுத்திக் கொண் டால் அழகாகத்தான் இருக்கிறது.

வள்ளி : கமலம், பட்டாடைகள்தான் அழகைத்தரும் என்று நினையாதே; பட்டாடைகள் தேவையில்லை. சாதாரண ஆடைகளே போதுமானவை. ஆனால் அவை சுத்தமாக இருக்கவேண்டும்.

கமலம் : வள்ளி, நானும் இனிமேல் நகைகளை அணிவதில் ஆசை கொள்ளமாட்டேன். நேரமாகிறது நாளைக் காலையில் கட்டாயம் வா.

வள்ளி : ஆகட்டும், போய் வருகிறேன், வணக்கம்.

கமலம் : போய்வா, வணக்கம்.

கேள்விகள்

1. குழந்தைகளுக்கு நகைகள் போடுவதால் ஏற்படும் கெடுதல் என்ன ?
2. அழகைத் தரப் போதுமானவை எவை ?

பயிற்சி

முதல் பகுதியிலுள்ள தொடருக்குத் தகுந்த சொல்லை இரண்டாம் பகுதியிலிருந்து எடுத்துக் கொண்டு வாக்கியங்கள் அமை :—

	முதல் பகுதி	இரண்டாம் பகுதி
1.	நாளைக் காது குத்தும் சடங்கு	வரவேண்டும்.
2.	நீ எங்கள் வீட்டிற்கு	வருவார்.
3.	ஊரிலிருந்து எங்கள் மாமா	நடைபெறும்.
4.	கடைக்குப் போய் ஒரு சட்டை	வாங்குவோம்.

5. கேடு செய்தார் கேடு அடைவர்

கட்டளை	தடாகம்	வானரம்
ஆணை	இளமையாக	பொய்கை
ஆபத்து	வேந்தன்	ஆண்டிருந்த
தந்திரம்	பரிவாரங்கள்	மர்க்கடம்

1. ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான். ஒரு சமயம் அவனுடைய குதிரைக் கொட்டகை தீப்பட்டு, அதிலிருந்த குதிரைகளின் தேகம் வெந்து புண்ணாயிற்று. அப்புண்ணை ஆற்ற வைத்தியர்கள் குரங்கின் நெய் வேண்டுமென்று கூறினர். உடனே அரசன் தன் வேலையாட்களை அழைத்துப் பல குரங்குகளைப் பிடித்துவரும்படி கட்டளை இட்டான்.

2. சேவகர்கள் அரசன் ஆணைப்படி காட்டிற்குச் சென்று பல குரங்குகளைப் பிடித்து வந்தார்கள். அவற்றுள் ஒரு குரங்கு தந்திரமாகத் தப்பியோடி வேறொரு காட்டை அடைந்தது.

3. அக்குரங்கு தண்ணீர் குடிப்பதற்காக அக் காட்டிலிருந்த ஒரு குளத்திற்குச் சென்றது. அக்குளத்தில் இறங்கித் தண்ணீர் குடித்தால், தனக்கு ஏதாவது ஆபத்து நேரிடக்கூடும் என்று அது நினைத்தது. அங்கிருந்த ஒரு தாமரைத்தண்டை முறித்து எடுத்து, அதைக் கொண்டு தண்ணீரை

உறிஞ்சிக் குடித்தது. அத் தடாகத்தில் ஒரு பூதம் வசித்து வந்தது. அது தடாகத்தில் இறங்குகிறவர்களைப் பிடித்து விழுங்குவது வழக்கம். அது குரங்கின் தந்திரத்தைக் கண்டு ஆச்சரியமடைந்தது. குரங்கின் புத்தியைப் புகழ்ந்து அதற்கு ஒரு முத்துமாலையை இனமாகக் கொடுத்தது.

4. குரங்கு முத்துமாலையை எடுத்துக் கொண்டு தன் இனத்தாரில் பலரை அழித்த வேந்தனிடம் சென்று முத்து மாலையைக் காட்டி, "வேந்தே! பக்கத்திலுள்ள காட்டில் ஒரு தடாகம் இருக்கிறது. அதில் இறங்கிக் குளிக்கிற ஒவ்வொருவருக்கும் இது போன்ற முத்துமாலை ஒன்று கிடைக்கும். வேண்டுமானால் நீர் உம் பரிவாரங்களுடன் அங்கு வாரும். நான் வழிகாட்டிச் செல்லுகிறேன்" என்று கூறியது.

5. வேந்தன் வானரத்தின் வார்த்தைகளை நம்பி, தன் பரிவாரங்களுடன் காட்டிற்குச் சென்றான். வானரம் வேந்தனை ஓரிடத்தில் இருக்கச்செய்து அவனுடைய பரிவாரங்களை அப்பொய்கையில் இறங்கிக் குளிக்கச் சொல்லிற்று. அவர்கள் பொய்கையில் இறங்கவே, அங்கிருந்த பூதம் அவர்களை எல்லாம் விழுங்கி விட்டது. வெகு நேரம் கழித்தும் தன் பரிவாரங்கள் திரும்பி வராததைக்கண்ட

வேந்தன் திடுக்கிட்டு வானரத்தை வின விஞன். மர்க்கடம் ஒரு மரத்தில் ஏறிக் கொண்டு, "வேந்தே, குளத்தில் இறங்கிய உமது பரிவாரங்களை அங்கு வசிக்கும் பூதம் விழுங்கி விட்டது. நீர் தலைநகர் சென்று நீதி தவருமல் அரசு புரியும்" என்று கூறி மரத்திற்கு மரம் தாவி ஓடி ஒளிந்தது.

கேள்விகள்

1. அரசன் பல குரங்குகளைப் பிடித்துவரச் செய்தது ஏன்?

2. அரசனிடமிருந்து தப்பியோடிய குரங்குக்கு முத்து மாலை எவ்விதம் கிடைத்தது?

3. குரங்கு முத்துமாலையை அரசனிடம் காட்டி என்ன சொன்னது?

பயிற்சி

புத்தகம் மேசையின் மேலே இருக்கிறது.

புத்தகம் மேசையின் கீழே இருக்கிறது.

மேலே கீழே என்னும் வார்த்தைகள் ஒரே அர்த்த முள்ளவை அல்ல. எதிரான அர்த்தமுள்ளவை. இவை களில் ஒன்று மற்றொன்றின் எதிர்வார்த்தை அல்லது எதிர்ப்பதம் ஆகும். × இந்த அடையாளம் எதிர்ப்பதங் களைக் குறிக்க உபயோகப்படுகிறது.

மேலே × கீழே. நீண்ட × குறுகிய.

6. தென்னை மரம்

அடிமரம்	இளைப்பாறு	கொட்டாங்கைச்சி
மணற்பாங்கான	நேற்று	தென்னம் பாளை
இடையே	திண்மையாக	சவுக்காரம்
குளிர்ச்சியாக	தீனி	ஈர்க்குகள்
வழி நடந்து	கொப்பரை	துடைப்பம்

1. பிள்ளைகளே! நீங்கள் இளநீரும் தேங்காயும் சாப்பிட்டிருக்கிறீர்கள். அவை தென்னை மரத்திலிருந்து கிடைக்கும் என்பது உங்களுக்குத் தெரியும் அல்லவா?

2. தென்னை மரம் மிகவும் உயரமாக வளரும். கிளைகள் இல்லாத மரங்களுள் இதுவும் ஒன்று. இதன் உச்சியில் மாத்திரம் மட்டைகள் அடர்ந்திருக்கும். அடிமரம் தூண்போலே இருக்கும். ஓலைகள் அடி அகன்று நுனி குறுகி இருக்கும். இம்மரம் கடற்கரை ஓரங்களிலும் மணற் பாங்கான இடங்களிலும் செழிப்பாக வளரும்.

3. மட்டைகளுக்கு இடையே தேங்காய்கள் குலை குலையாகத் தொங்கும். இளந் தேங்காயின் நிறம் பசுமையானது. அதற்குள் இருக்கும் இளநீர் குளிர்ச்சியாகவும் தித்திப்பாகவும் இருக்கும். வழிநடந்து அதிக தாகம் அடைந்தவர்கள் இளநீரைக் குடித்து இளைப்பாறுவார்கள். இளநீரோடு இருக்கும் வழுக்கையும் சாப்பிடுவதற்குச் சுவையாக இருக்கும்.

4. தேங்காய் முதிர்ந்து நெற்று ஆகும். அப்பொழுது வழுக்கை முற்றி நன்ருக இறுகி விடும். அதற்குப் பருப்பு என்று பெயர். அதை ஓடு மூடியிருக்கிறது. அந்த ஓடு திண்ணமாக இருக்கிறது. அதைக் **கொட்டாங்கைச்சி** என்று சொல்லுகிருர்கள். இதனுல் அகப்பை போன்ற சில உபயோக முள்ள சாமான்கள் செய்யலாம்.

5. தேங்காய்ப் பருப்பு சுவையாக இருப்பதோடு நல்ல உணவாகவும் இருக்கிறது. பருப்பு முற்றிக் கொப்பரையாகும். இதிலிருந்து எடுக்கும் எண்ணெய்தான் **தேங்காய் எண்ணெய்**. தேங்காய்ப் பிண்ணுக்கு பசு, எருமை முதலிய மிருகங்களுக்குத் தீனி ஆகும்.

6. தென்னை ஓலையைக் கீற்ருக முடைந்து பந்தல் போடுகிருேம்; கூரை வேய்கிருேம். தென்னை மட்டை, ஓலை முதலியன அடுப்பு எரிக்க உதவும். தேங்காய் எண்ணெயைத் தலையில் தடவிக் கொள்ள

லாம். மேலும் அது உணவுப் பொருள்கள் செய்யவும், சவுக்காரம், மெழுகுவத்தி முதலி யன செய்யவும் பயன்படுகிறது. ஈர்க்குகளைத் துடைப்பமாகக் கட்டி உபயோகிக்கலாம். தேங்காய் நார் கயிறு திரிக்க உதவும்.

7. தென்னந் தோட்டத்தைத் தென் னந்தோப்பு என்று சொல்லுகிறோம்.

கேள்விகள்

1. தென்னை மரம் எவ்விடங்களில் செழிப்பாக வளரும்?

2. 'கொப்பரை' என்பது என்ன ?

3. தேங்காய் எண்ணெய் எவ்விதம் தயாரிக்கப் படுகிறது?

4. தென்னை மரத்தின் தோற்றத்தைப் பற்றி ஆறு வாக்கியங்கள் எழுது.

பயிற்சி

எதிர்ப் பதங்கள் எழுது:—

உயரமாக, உச்சியில், குளிர்ச்சியாக.

இலக்கணம்

மரம்—இதில் ம, ர, ம் என்ற மூன்று எழுத்துக்கள் இருக்கின்றன. இவற்றை ம்ரம என்று சேர்த்துப் படித்தால் அர்த்தமில்லை. மரம் என்று அந்த எழுத்துக் களைச் சேர்த்துப் படிக்கும்பொழுது அர்த்தம் இருக்கிறது அல்லவா ? இப்படி அர்த்தம் உள்ளது 'சொல்' எனப் படும்.

தீ, வா, போ என்று சில எழுத்துக்கள் தனியாக நின்றும் சொல்லாகும். அவற்றுக்கு ஓரெழுத்துச் சொல் என்று பெயர்.

7. மூக்கறையன் கதை

பரிகாசம்	தெய்வம்	வினவினர்
சூழ்ச்சி	பாக்கியம்	விருப்பம்
தத்தம்	கண்ணுற்ற	அரிந்து
சேகரித்தல்	தென்படவில்லை	ஏளனம்
சுறுசுறுப்பாக	இடையூருக	திருமேனி
திடீரென்று	ஆரவாரித்தனர்	வான்

1. ஒரு ஊரில் ஒரு மூக்கறையன் இருந்தான். அவனைக் கண்டதும் அவ் வூரிலுள்ள மக்கள் கேலிசெய்வது வழக்கமாக இருந்தது. இவ்விதம் அவ்வூரார் தன்னைக் கண்டதும் பரிகாசம் செய்வதை எண்ணி அவன் மிகவும் மனம் வருந்தினுன். ஊராருக்குப் புத்தி வரும்படி செய்ய மூக்கறையன் ஒரு சூழ்ச்சி செய்தான்.

2. ஊரில் அறுவடை காலம் வந்தது. மக்கள் தத்தம் வயல்களில் அறுத்தல், பிணையல் அடித்தல், தானியத்தைச் சேகரித்தல் முதலிய வேலைகளைச் செய்துகொண்டு சுறுசுறுப்பாக இருந்தார்கள். மூக்கறையனும் தன் குடும்பத்தாருடன் வேலை செய்துகொண்டிருந்தான். அச்சமயம் அவன் தான் செய்து கொண்டிருந்த வேலையைத் திடீரென்று நிறுத்திவிட்டு ஆகாயத்தை நோக்கி நின்று, "ஆ! தெய்வமே! என்னே! உனது அழகு; ஏழையான நான் உம்மைக் காணும்

பாக்கியம் என்னே!" என்று பலவாறு கூறிப் பாடினான், ஆடினான், கூத்தாடினான்.

3. மூக்கறையனின் செயலைக் கண்ணுற்ற ஊராருக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவர்கள் ஆகாயத்தை நோக்கினர்; அங்கு ஒன்றையும் காணவில்லை. பிறகு, சிலர் மூக்கறையனை நோக்கி, "ஏ, நீ கடவுளைக் காண்பதாகச் சொல்லுகிறாயே அந்தக் கடவுள் எங்கள் கண்களுக்கு ஏன் தென்படவில்லை?" என்று வினவினர். அதற்கு மூக்கறையன், "ஐயன்மீர், கடவுளைக் காண்பதற்கு உங்களுடைய மூக்குதான் உங்களுக்கு இடையூறாக இருக்கிறது" என்று கூறினான். கடவுளைக் காணவேண்டும் என்று விருப்பம் கொண்ட சிலர் தத்தம் மூக்கை அரிந்து கொண்டு, ஆகாயத்தை நோக்கினர். கடவுளைக் காணாது திகைத்தனர். ஆயினும், மற்றவர்கள் தம்மை ஏளனம் செய்யாதிருக்கும் பொருட்டு அவர்கள் ஆகாயத்தை நோக்கி நின்று, 'ஆ! கடவுளின் திருமேனி காணக் கிடைத்த நமது பாக்கியமே பாக்கியம்!' என்று கூறி ஆரவாரித்தனர்.

4. இவ்விதம் மூக்கை அறுத்துக் கொண்டவர்களின் கூற்றைக் கண்ட மற்ற

வர்களும் தத்தம் மூக்கை அரிந்து கொண்டு வானை நோக்கியபொழுது கடவுள் காணப் படாதது கண்டு, கவலைக் கடலுள் ஆழ்ந் தார்கள். ஆகவே, அவ்வூரார் யாவரும் மூக்கறையர் ஆயினர். இப்பொழுது ஒரு வரையொருவர் 'மூக்கறையன்' என்று கேலி செய்வதற்கு இல்லை அல்லவா ?

[இக்கதையை அபிநயப் பாட்டாக எழுதப்பட் டுள்ளது. அதைப் படித்து அபிநயத்துடன் பாடு.]

[அபிநயப் பாட்டு]

ஒரு காலத்தொரு மூக்கறையன்
ஊரார் செய்யும் கேலிகளைச் 1
சற்றும் பொறுக்க மாட்டாமல்
தான் ஓர் சூழ்ச்சி செய்தானே. 2
வேலை நடுவில் எழுந்திருந்து
மேலே நோக்கிக் கைகுவித்து, 3
'ஈசா ! உனது வடிவம் எல்லாம்
ஏழை காணத் திரு வுளமோ' 4
என்றே பாடிக் குதித்தாடி
எழுந்தே தொழுதான் விழுந்தானைக் 5
கண்டார் சிலர்கள் எதிர்சென்று
'கடவுள் எமக்கேன் தெரியவில்லை ?' 6

எனக் கேட்ட மூக்கறையன்
'எல்லாம் மூக்கே இடையூறும் 7
மூக்கே இல்லார்க் கல்லாமல்
முதல்வன் வடிவம் தோன்றுது' 8
இதனைக் கேட்டார் மூக்கரிந்தார்;
எதிரே கடவுள் காணவில்லை. 9
எனினும் மானம் உடையவராய்
'என்ன அழகு ஈசன் உரு!' 10
என்று கூவக் கேட்டார்கள்
எல்லோரும் எழுந்து மூக்கரிந்து, 11
கடவுள் காட்சி இல்லாமல்
கவலைக் கடலுள் ஆழ்ந்தார்கள். 12
இதனால் அறியவரும் நீதி
'எவரும் கேலி செய்யாதீர்.' 13

கேள்விகள்

1. வேலை செய்துகொண்டிருந்த மூக்கறையன் திடீரென்று வேலையை நிறுத்திவிட்டு என்ன செய்தான்?

2. ஊராருக்குக் கடவுள் காணப்படாததன் காரணம் என்னவென்று மூக்கறையன் கூறினான்?

3. மூக்கறையன் கூறியதை நம்பிய சிலர் யாது செய்தனர்?

4. அவர்களுக்குக் கடவுள் காணப்படாத போதிலும் அவர்கள் கடவுளைக் காண்பதாகக் கூறிக் கூத்தாடியது ஏன்?

5. இக்கதையிலிருந்து நீ அறியும் நீதி என்ன?

பயிற்சி

1. கேலி—இதே அர்த்தமுள்ள வேறு இரண்டு வார்த்தைகள் எழுதுக.

2. சுறுசுறுப்பாக, இடையூறாக, திடீரென்று—இந்த வார்த்தைகளைத் தனித்தனியே வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. அவ்வூரிலிருந்து = அவ்வூரில் + இருந்த. இது போலக் கீழ்க் கண்டவைகளைப் பிரித்து எழுது: மூக்கரிந்தார், குதித்தாடி, ஒருவரையொருவர்.

இலக்கணம்

1. மூக்கறையன், ஒரு, புத்தி, அபிநயத்துடன்—இச்சொற்கள் ஒவ்வொன்றிலும் எத்தனை எழுத்துக்கள் உள்ளன?

2. உனக்குத் தெரிந்த ஓரெழுத்துச் சொற்கள் சில சொல்லு.

8. பாடம் வாசித்தல்

நிமிர்ந்து	தாழ்ந்த	விளங்க
நேராக	குரல்	பிறரோடு
தெளிவாய்	பொருள்	உச்சரித்தல்

1. பிள்ளைகளே! நீங்கள் பாடம் வாசிக்கும்போது நிமிர்ந்திருக்கவேண்டும். புத்தகத்தை இடது கையில் மார்புக்கு நேராக உயர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

2. உபாத்தியாயருக்கும் வகுப்பிலுள்ள பிள்ளைகளுக்கும் தெளிவாய்க்கேட்கும்படி வாசித்தல் வேண்டும். தாழ்ந்த குரலில் வாசிப்பதும் அதிகமாகச் சத்தம் போட்டு வாசிப்பதும் சரி அல்ல. ஒரே குரலில் பாடம் முழுமையும் வாசித்து விடுவது சரியன்று. வாசிக்கும் பொருளை நீங்கள் நன்றாகக் கவனிக்க வேண்டும். பொருளைத் தெரிந்து கொண்டு வாசிப்பதும் அவசியமாகும்.

3. கேள்விகளை வாசிக்கும்பொழுது நீங்களே

அக்கேள்விகளைக் கேட்பதுபோல வாசிக்க வேண்டும். ஆச்சரியமான செய்திகளை வாசிக்கும் பொழுது ஆச்சரியத்தை வெளியிட்டு வாசித்தல் வேண்டும்.

4. உங்களுக்குப் பொருள் விளங்குவதுபோல், கேட்பவருக்கும் அது நன்ருக விளங்கும்படி நீங்கள் நிறுத்தி வாசிக்க வேண்டும். விரைவாக வாசிப்பவன் நன்ருக வாசிக்கமாட்டான்.

5. இராகம் போட்டு வாசிப்பது சரியன்று. பிறரோடு பேசுவது போல வாசிப்பதே நல்லது. வார்த்தைகளை எல்லாம் நன்ருக உச்சரித்தல் வேண்டும்.

6. உபாத்தியாயர் பாடத்தை வாசித்துக் காட்டும்போது நீங்கள் நன்ருகக் கவனிக்கவேண்டும். அப்படிக் கவனிப்பதால் நீங்கள் வாசிக்கவேண்டிய முறையை அறிந்து கொள்வீர்கள். உபாத்தியாயர் வாசிக்கும்போது, கவனத்தை வேறு இடத்தில் செலுத்துகிறவன் பாடத்தை நன்ருக வாசிக்கத் தெரிந்து கொள்ளமாட்டான்.

7. இதைப் பற்றி வேடிக்கையான ஒரு கதை உண்டு. ஓர் உபாத்தியாயர் தம் வீட்டில் பையனுக்கு பாடம் வாசித்துக் காட்டினூர். பையனே வளையில் நுழைந்து

கொண்டிருந்த எலி ஒன்றைக் கவனித்தான். முடிவில் அவர் அவனை நோக்கி, "எல்லாம் நுழைந்ததா?" என்று கேட்டார். "வால் மாத்திரம் நுழையவில்லை" என்று பையன் பதில் சொன்னான். பிள்ளைகளே! நீங்கள் அப்பையனைப் போல் நடந்து கொள்ளலாகாது.

8. நீங்கள் மௌனமாக வாசிக்கும் பழக்கத்தையும் கைக்கொள்ள வேண்டும். சிலர் செய்தித் தாள், கதைப் புத்தகங்கள் இவைகளை மௌனமாகப் படித்துக் கொண்டு போவதை நீங்கள் கவனித்து இருப்பீர்கள். மௌனமாகப் படித்துக் கொண்டு போனால் செய்தியைச் சீக்கிரமாகவும், நன்றாகவும் அறிந்துகொள்ள முடியும்; பக்கத்தில் வேறு வேலையில் ஈடுபட்டுள்ள மற்றவர்களுக்கும் தொந்தரவு இராது.

கேள்விகள்

1. வகுப்பில் பாடம் வாசிக்கும்போது புத்தகத்தை எவ்விதம் பிடித்து நிற்கவேண்டும்?

2. பாடத்தை வாசிக்கும்போது கவனிக்கவேண்டியவை யாவை?

3. உபாத்தியாயர் பாடம் வாசித்துக் காட்டும் போது கவனியாத பையனைக் குறித்துச் சொல்லும் கதை யாது?

4. மௌன வாசிப்பால் ஏற்படும் நன்மைகள் யாவை?

1. பிரித்து எழுது :—

நிமிர்ந்திருக்கவேண்டும், சரியன்று.

2. எதிர்ப்பதங்களை எழுது :—

இடது கை, உயர்த்தி, அதிகமாக, அவசியம், விரைவாக.

3. சேர்த்து எழுது :—

வகுப்பில் உள்ள, சரி அல்ல.

இலக்கணம்

பையன் படித்தான். இச்சொற்களைக் கவனி. பையன் என்பது ஒரு பெயர். படித்தான் என்பது அவன் செய்த செயலைக் குறிக்கிறது.

பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல் என்றும், செயல் செய்வதைக் குறிப்பது வினைச்சொல் என்றும் சொல்லப்படும்.

பயிற்சி

இப்பாடத்தில் உள்ள பெயர்ச் சொற்களை எடுத்துச் சொல்.



9. மீன்கள்

குட்டை	உறுப்பு	பிராணி
ஏரி	வழுவழுப்பாக	செம்படவர்
நீர் நிலைகள்	நெய்ப்பசை	வலைவீசி
நெடு நேரம்	வாழ்வதற்கு	தூண்டில்
மூச்சுத் திணறி	பழமொழி	துள்ளினால்

1. மீன்கள் தண்ணீரில் நீந்தி விளையாடுவதைச் சாதாரணமாகப் பார்க்கலாம். அப்பொழுது அவற்றின் அடிப்பாகம் மின்னுகிறது அல்லவா? அப்படி மின்னுவதாலேதான் அவற்றை **மீன்கள்** என்று சொல்லுகிறோம்.

2. தண்ணீர் தேங்கி நிற்கும் குட்டைகளில் சிறிய மீன்களையும், ஆறு, குளம், ஏரி,

கடல் முதலான நீர் நிலைகளில் பெரிய மீன்களையும் பார்க்கலாம். மீன்களில் பலவகை உண்டு. சில மீன்கள் உருண்டையாயிருக்கும். சில தட்டையாக இருக்கும். பல்வேறு நிறங்கள் உள்ள மீன்களும் உண்டு. கயல், சேல், வரால், கெண்டை முதலியவை சில மீன் இனங்களின் பெயர்கள்.

3. மனிதர்களுக்கும், மிருகங்கள், பறவைகள், மரங்கள், செடிகள் இவைகளுக்கும் இருப்பிடம் நிலம். மீன்களுக்கோ இருப்பிடம் தண்ணீர். நாம் தண்ணீரில் மூழ்கி நெடுநேரம் இருந்தால் மூச்சுத் திணறி இறந்து போவோம். அப்படியே மீன்களும் சிறிது நேரத்திற்கு மேல் நிலத்தில் இருந்தால் மூச்சுவிட முடியாமல் இறந்துவிடும்.

4. மீனின் உறுப்பு ஒவ்வொன்றும் அது தண்ணீரில் வசிப்பதற்கேற்ப அமைந்திருக்கிறது. மீன் தண்ணீரில் தன்னுடைய சிறகுகளின் உதவியால் நீந்திச் செல்லுகிறது. இந்தச் சிறகுகளை '**மீன் துடுப்புகள்**' என்று சொல்லுவார்கள். நீங்கள் மீனைத் தொட்டுப் பார்த்தால் அது வழுவழுப்பாக இருப்பதை அறிவீர்கள். அதன் தேகத்தில் கசியும் ஒரு விதமான நெய்ப்பசையே அதற்குக் காரணம் ஆகும். இப்பசையும் சிறகுகளும் மீன் தண்ணீரில் வாழ்வதற்கு உதவுகின்றன.

5. நாம் மூக்கால் மூச்சு விடுகிறோம். மீன் வாயினுள் உள்ள சுவாச உறுப்புகளினுல் மூச்சு விடுகிறது. அந்த உறுப்புகளுக்குத் தண்ணீரிலுள்ள காற்றை இழுக்கக் கூடிய சக்தி உண்டு. இந்த உறுப்புகளினுல் மீன் மூச்சு விடுவதை 'குமிழ் அடிப்பது' என்று சொல்லுவார்கள்.

6. மீன் தண்ணீரிலுள்ள பூச்சி, புழுக்களையும் சிறு மீன்களையும் தின்னுகிறது. 'பெரிய மீனுக்குச் சின்ன மீன் இரை' என்பது ஒரு பழமொழி. பெண் மீன் ஆயிரக் கணக்கான முட்டைகளை இடும். இவற்றில் பல, தண்ணீரிலுள்ள பிராணிகளுக்கு ஆகாரம் ஆகின்றன. மற்றவை சூரிய வெப்பத்தால் பொரிந்து குஞ்சுகள் ஆகும்.

7. செம்படவர்கள் ஆறு குளங்களில் வலை வீசி மீன் பிடிப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். தூண்டிலாலும் மீன் பிடிப்பதுண்டு. 'தூண்டிலில் அகப்பட்ட மீன் துள்ளினுல் விடுவார்களா?' என்பது பழமொழி.

கேள்விகள்

1. மீன்களுக்கு அப்பெயர் ஏற்படக் காரணம் என்ன?

2. மீன்கள் எந்தெந்த நீர் நிலைகளில் வசிக்கின்றன?

3. சில மீன் இனங்களின் பெயர்களைச் சொல்லுக.

4. மீனுக்கு அதன் சிறகுகளால் என்ன உபயோகம்?

5. மீனின் தேகம் வழுவழுப்பாக இருக்கக் காரணம் என்ன?

6. மீன் எவ்விதம் சுவாசிக்கிறது?

7. 'குமிழ் அடிப்பது' என்ருல் என்ன?

8. மீனின் ஆகாரம் என்ன?

பயிற்சி

1. வாக்கியங்களில் அமைத்து எழுது:—

நெடுநேரம், ஒவ்வொன்றும், ஆயிரக்கணக்காக.

2. கீழ்க்காணும் சொற்களைப் பொருள் வேறுபாடு விளங்கத் தனித் தனி வாக்கியங்களில் அமைத்து எழுது:—

இறந்து = செத்து; இரந்து = பிச்சை எடுத்து.
இரை = ஆகாரம்; இறை = அரசன், வரி

இலக்கணம்

மீன் தண்ணீரிலுள்ள புழு பூச்சிகளைத் தின்னுகிறது. இந்த வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்கள் யாவை?

செம்படவர்கள் வலை வீசி மீன் பிடிப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இவ்வாக்கியத்திலுள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் சொல்.

10. உண்மை பேசிய உத்தமன்

பளபளப்பாய்	மகிழ்ந்தான்	மெச்சினர்
புகுந்தான்	மலர்ச் செடிகள்	பெயரும் புகழும்
நினைவு	பெருங் கோபம்	பிற்காலத்தில்
கருவி	தவறு	புகழ்பெற்று

1. உத்தமன் எட்டு வயதுள்ள சிறுவன். அவனுடைய தந்தையார் அவனுக்கு ஒரு கத்தி வாங்கிக் கொடுத்தார். அந்தக் கத்தி அழகாயும் பளபளப்பாயும் இருந்தது. பள்ளிக்கூடம் விட்டு வந்ததும், அவன் ஆசையோடு அக் கத்தியை எடுத்துக்கொண்டு தன் வீட்டுக் கொல்லையில் இருந்த பூந்தோட்டத்தில் புகுந்தான்.

2. அத்தோட்டத்தில் பலவிதமான பூஞ் செடிகள் இருந்தன. அவற்றைப் பார்த்துக் கொண்டே சென்ற உத்தமன் ஏதாவது ஒரு செடியைத் தன் புதிய கத்தியால் வெட்டிப் பார்க்க வேண்டுமென்று எண்ணினன். அவனது தந்தை அருமையாக வளர்த்து வந்த ஒரு மல்லிகைச் செடியை அவன் வெட்டிப் பார்த்தான். 'ஆ! இக் கத்தி எவ்வளவு கூர்மையானது! இதைக் கொண்டு எதையும் வெட்டி விடலாம்' என்று அவன் கருதி மகிழ்ந்தான்.

முதல் பகுதி	இரண்டாம் பகுதி
1. உத்தமன் கத்தியை எடுத்துக் கொண்டு	1. பூஞ்செடிகள் இருந்தன.
2. தோட்டத்தில் பலவித மான	2. தோட்டத்தில் புகுந்தார்.
3. உத்தமனுடைய தகப்ப ஞர்	3. எப்போதும் உண்மையே பேசி வந்தான்.
4. உண்மை பேசிய உத்த மன்	4. பூந்தோட்டத்தில் புகுந் தான்.

இலக்கணம்

'செடி' இது ஒரு பொருள். 'செடிகள்' என்று சொல்லும்போது ஒன்றுக்கு மிகுந்த இரண்டு அல்லது பல இருப்பது தெரிகிறதல்லவா. ஒன்றைக் குறிப்பது 'ஒருமை' என்றும், ஒன்றுக்கு அதிகமாக இருந்தால் 'பன்மை' என்றும் சொல்லப்படும்.

பயிற்சி

1. மலர், பையன், ஆண், பெண், பிள்ளை இவை ஒருமைப் பெயர்கள். இவற்றுக்குப் பன்மைப் பெயர்கள் எவை?

2. பணக்காரர், சிட்டங்கள், தொழில்கள், ஆடை கள் இவற்றுக்கு ஒருமைப் பெயர்கள் சொல்.

3. காக்கையின் அலகு அதற்கு வாயாக உதவு கிறது. பழம், தானியம் முதலியவைகளும் அவற்றுக்கு உணவாகும். இவ்வாக்கியங்களிலுள்ள பெயர் சொற் களைப் பொறுக்கி ஒருமைப் பெயருக்குப் பன்மைப் பெயர்ச் சொல்.

11. நூல் நூற்றல்

தொழில்	இங்ஙனம்	முடிச்சு
ஓய்வு நேரம்	சுழலக்கூடிய	தொடங்கும்
பயன் பெறலாம்	விளிம்பு	தற்காலம்
இறுதியான	இணைத்து	பலமடங்கு
எதிர் எதிராக	பிணைத்து	போதிய

1. நாம் உடுத்தும் ஆடைகள் பெரும்பாலும் பருத்தி ஆடைகளே. பருத்தியிலிருந்து ஆடைகளை உண்டாக்க நூற்றல், நெய்தல் ஆகிய இரண்டு தொழில்களும் நடந்தாக வேண்டும். இவற்றுள் நூற்றலே குடிசைத் தொழில்களுள் மிகச் சிறந்தது. பணக்காரர் முதல் ஏழை வரை, கிழவர் முதல் சிறுவர் வரை தமது ஓய்வு நேரங்களில் இதனால் லாபமும் பயனும் பெறலாம். மாணவர் ஒவ்வொருவரும் இதனை நன்கு அறிதல் வேண்டும்.

2. பருத்தியில் முக்கியமானவை கம்போடியாப் பருத்தியும், நாட்டுப் பருத்தியுமாகும். கம்போடியாப் பருத்தி பெரியதாகவும் நீண்ட துய் உடையதாகவும் இருக்கிறது. நூல் நூற்கும் எந்திர சாலைகளில் நூல் நூற்கக் கம்போடியாப் பருத்தியை உபயோகிக்கிறார்கள். ஆனால் கையால் நூற்க, நாட்டுப் பருத்தியே உறுதியானது ஆகும்.

3. பருத்திக்காய் வெடித்த பின்னர் அதிலுள்ள பருத்தியை எடுத்து வெயிலில் உலர வைத்து ஈரத்தைப் போக்க வேண்டும். பின் அதை மணையிலிட்டு அரைக்க வேண்டும். மணையின் நடுவில் இரண்டு உருளைகள் இருக்கின்றன. ஓர் உருளையுடன் சேர்த்துப் பக்கத்தில் ஒரு கைப் பிடி இருக்கிறது. இதனைப் பிடித்துச் சுற்றினால், இரண்டு உருளைகளும் எதிர் எதிராகச் சுற்றும். அவற்றின்

இடையில் அகப்பட்ட பருத்தியின் பஞ்சு

மாத்திரம் அவற்றின் இடையே சென்று பின்புறம் விழும். கொட்டைகள் முன்புறம் தங்கிக் கீழே விழுந்து விடும்.

4. இங்ஙனம் பிரித்த பஞ்சை வில்லால் அடித்து மெல்லியதாக்குவர். பின் சிறு கம்பி அல்லது நாணற்குச்சி ஒன்றை வைத்துத் திரித்தால், பஞ்சு உருண்டு திரண்டு திரி அல்லது கொட்டையாகும். இதைத் தக்ளி அல்லது இராட்டையின் மூலம் நூலாக நூற்பர்.

5. இராட்டையில் சுழலக்கூடிய ஒரு சக்கரம் உண்டு. அதை ஒரே பலகையில் செய்து அதன் விளிம்பின் நடுவில் நூல் கயிறு ஓடும்படியான பள்ளம் ஒன்று செதுக்கி யிருப்பார்கள். சில இராட்டைகளில் இது போன்ற சக்கரத்திற்குப் பதிலாக, பக்கத் திற்கு ஆறு நீண்ட பலகைகளை வைத்துச் சக்கரமாகச் செய்திருப்பார்கள். இச் சக்க ரத்தில் எதிர் எதிராகவுள்ள பலகைகளைக் கயிற்றால் இணைத்திருப்பார்கள். இக் கயிற் றுக்கு இராட்டைக் கயிறு என்று பெயர்.

6. இராட்டையில் சக்கரம் இருக்கும் பக்கத்திற்கு எதிர்ப் பக்கத்தில் கதிர் வைக்கப் பட்டிருக்கும். சக்கரத்தையும் கதிரையும் ஒரு கயிற்றால் பிணைத்திருப்பார்கள். இக் கயிற்றுக்கு மாலைக் கயிறு என்று பெயர்.

7. சக்கரத்தைச் சுற்றச் செய்தால் மாலைக் கயிறு சுற்றத் தொடங்கும். அது சுற்றவே அதனோடு சேர்ந்துள்ள கதிர் விரைவாகச் சுழலும். அப்பொழுது நாம் கொட்டை போடப்பட்ட பஞ்சுத் துய்யை இழுத்து நூலாகத் திரிக்கலாம். இராட்டையில் நூற்கப்படும் நூலுக்குக் **கதர் நூல்** என்று பெயர்.

8. இராட்டையில், நூற்கும் வேகத்தை அதிகரிக்கத் தற்காலம் **விசைச் சக்கரம்** என்ற மற்றொரு சக்கரமும் வைக்கப்படுவதுண்டு. அது இராட்டைச் சக்கரத்தை விடச் சிறியது. கயிற்றின் மூலம் அது இராட்டைச் சக்கரத்துடன் பிணைக்கப்படுகிறது. இராட்டைச் சக்கரம் ஒரு சுற்றுச் சுற்றும் பொழுது அது அநேக சுற்றுக்கள் சுற்றும். ஆகவே, கதிரும் பல மடங்கு வேகமாய்ச் சுற்றும்.

9. கதிரில் போதிய நூல் சுற்றப்பட்டதும், அதனை 27 அங்குல நீளமுள்ள

ஆவலத்தில் சுற்றுவார்கள். இதில் எண்பது இழைகள் கொண்டது ஒரு முடிச்சு, ஏழு முடிச்சுகள் கொண்டது ஒரு சிட்டம், பத்துச் சிட்டங்கள் ஒரு **கழி** என்று

கணக்கிடுவர். ஆடைகள் தறிகளில் நெய்யப்படுகின்றன. கதர் நூலால் நெய்யப்படும் ஆடைகளைக் **கதர் ஆடைகள்** என்பார்கள்.

கேள்விகள்

1. குடிசைத் தொழில்களில் நூல் நூற்றலை மிகச் சிறந்ததாகச் சொல்வது ஏன் ?

2. பருத்தியின் முக்கியமான இரண்டு வகைகள் யாவை? இராட்டையில் நூல் நூற்க எப்பருத்தி நல்லது ?

3. இராட்டையின் அமைப்பைப் பற்றி ஆறு வாக்கியங்கள் எழுது.

இலக்கணம்

முருகன் செடியை வளர்த்தான்—இத் தொடரிலுள்ள முருகன் என்ற பெயர் மனிதனையும் செடி என்னும் பெயர் மனிதன் அல்லாத ஒன்றையும் குறிக்கிறது. இப்படியாக மனிதரைக் குறிக்கும் பெயர்களென்றும், மனிதர் அல்லனவற்றைக் குறிக்கும் பெயர்களென்றும், பெயர்ச் சொற்கள் இரண்டு வகைப்படும். மனிதரைக் குறிக்கும் பெயர் உயர்திணைப் பெயர். மனிதரல்லாதவற்றைக் குறிக்கும் பெயர் அஃறிணைப் பெயர்.

முருகன், வள்ளி, வீரர் இச் சொற்கள் முறையே ஆணையும், பெண்ணையும், பலரையும் குறிக்கின்றன.

ஆணைக் குறிப்பது ஆண்பாற் பெயர்.

பெண்ணைக் குறிப்பது பெண்பாற் பெயர்.

பலரைக் குறிப்பது பலர் பாற் பெயர். இம் மூன்றும் உயர்திணைப் பெயர்களாகும்.

மரம், ஒன்றைக் குறிப்பது—ஒன்றன் பால் பெயர்.

மரங்கள்—பலவற்றைக் குறிப்பது பலவின்பால் பெயர்.

இவ்விரண்டும் அஃறிணைப் பெயர்கள்.

12. இராட்டினப் பாட்டு

பத்தினிப் பெண்கள்	வாணிபம்	தோல்வி
இட்டமுடன்	பணி புரியும்	கைத்தறி

பல்லவி

ஆடுராட்டே–சுழன்–ருடுராட்டே (ஆடு)

அநு பல்லவி

சுழன்று சுழன்று சுழன் ருடுராட்டே-இனிச்
சுகவாழ்வு வந்ததென் ருடுராட்டே. (ஆடு),

சரணம்

பாபம் குறையுமென் ருடுராட்டே-இனிப்
பயங்கள் குறையுமென் ருடுராட்டே.
கோபங் குறையுமென் ருடுராட்டே-நல்ல
குணங்கள் மிகுந்ததென் ருடுராட்டே. (ஆடு)

பட்டணத்து வீதிகளில் சுற்றியலைந்து-மிகப்
பாடுபடும் கிராமத்துப் பத்தினிப் பெண்கள்
இட்டமுடன் தங்குடிசை நிழலிலிருந்து-நூலை
இழைத்துப் பிழைப்பாரென் றுடுராட்டே. (ஆடு)

உழுது நெய்து பல தொழில் செய்து-பொருள்
உதவும் வாணிபமிங் குயர்வதல்லால்
தொழுது பணிபுரியும் தொழில்களெல்லாம்-இனித்
தோல்வி யடையுமென் றுடுராட்டே. (ஆடு)

கைந்நூலைக் கைத்தறியில் நெய்த துணிதான்-நாம்
கட்டும் உடைகளெனத் திட்டமானால்
வெய்தான வேலையில்லாத் திண்டாட்டம்-நம்மை
விட்டொழியும் என்று சொல்லியாடுராட்டே (ஆடு)

—வெ. இராமலிங்கம் பிள்ளை.

கேள்விகள்

1. இப்பாடத்தில் வந்துள்ள இராட்டினப் பாட்டைப் பாடியிருப்பது யார் ?

2. இராட்டைக்கொண்டு நூல் நூற்பதால் ஏற்படும் நன்மைகள் என்ன ?



13. இரயில் வண்டி

பிரயாணம்	தொடுத்து	நிலையம்
நெடுந்தூரம்	எந்திரம்	பயணச் சீட்டு
எஞ்சின்	பளுவாக	

1. நம்முடைய முன்னோர்கள் மாட்டு வண்டியிலும், சில சமயங்களில் குதிரை வண்டியிலும் பிரயாணம் செய்தார்கள். அவர்கள் உபயோகித்த வண்டிகள் தற்காலத்திலுள்ள இரயில் வண்டிகளையும் மோட்டார் வண்டிகளையும் ஆகாய விமானங்களையும் போல அதிவேகமாக ஓடக் கூடியன அல்ல. தற்காலத்தில் இரயில் வண்டியில் பலர் நெடுந்தூரம் பிரயாணம் செய்யலாம்.

2. பிள்ளைகளே, நீங்கள் இரயில் **வண்டித்** தொடரைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா ? அதில் சில வண்டிகளையும் எஞ்சினையும் ஒன்றாகத் தொடுத்திருக்கிறார்கள். எஞ்சின் வண்டிகளை இழுத்துச் செல்கிறது. இது நீராவியால் இழுக்கப்படுகிறது.

3. இந்த நீராவி எவ்விதமாக உண்டாகிறது ? எஞ்சின் என்னும் எந்திர வண்டியில் நீரைக் காய்ச்சி ஆவி ஆக்குகிறார்கள். அந்த நீராவி வெளியில் பாயும்போது, எந்திர வண்டியின் சக்கரங்களைச் சுழலச் செய்கிறது.

4. இரயில் வண்டித் தொடர் மிகவும் பளுவாக இருக்கும் அல்லவா ? எனவே, சக்கரங்கள் பூமியில் புதைந்து போகாதபடி இரும்பினால் தண்டவாளங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இத்தண்டவாளங்களின் மீது இரயில் வண்டி அதிக வேகமாக ஓடுகிறது. இரும்பினால் அமைந்த பாதையை இருப்புப்பாதை என்று சொல்லுகிறோம்.

5. இரயில் வண்டி ஒவ்வொரு நிலையத்திலும் பிரயாணிகளை ஏற்றிக்கொள்ளவும் இறக்கிவிடவும் நிற்கிறது. சாமான்களையும் இரயில் வண்டியில் ஏற்றி அனுப்பலாம்.

வண்டியில் ஏறிக்கொள்வதற்கு முன், ஒவ்வொருவரும் **பயணச் சீட்டைப்** பெற்றுக் கொள்ளவேண்டும். இந்தச் சீட்டை **'டிக்கட்'** என்று ஆங்கிலத்தில் சொல்லுகிறார்கள்.

6. நீங்கள் பயணச் சீட்டைப் படித்துப் பாருங்கள். அதில் பிரயாணிகள் புறப்

S. R. 3rd EXPRESS 3-வது வகுப்பு

மதராஸ் எழும்பூர்

MS MADRAS EGMORE MS

TO

CGL CHINGLEPUT JN. CGL

D செங்கல்பட்டு D

8416

1-15 nP 35 க-௰௫ ந.பை.

படும் இடமும் போய்ச் சேர வேண்டிய இடமும் குறித்திருக்கும். சீட்டு வாங்குவதற்காகப் பிரயாணிகள் கொடுத்த பணமும் அதில் குறிக்கப்பட்டிருக்கும்.

7. சாதாரண மக்கள் பிரயாணம் செய்யும் வண்டிகளை **மூன்றாவது வகுப்பு வண்டிகள்** என்று சொல்லுகிறோம். இரண்டாவது வகுப்பிலும் முதல் வகுப்பிலும் பிரயாணம் செய்வதற்குப் பணம் அதிகமாகக் கொடுக்க வேண்டும். இவ்வண்டிகளில் உட்காரவும் படுக்கவும் மெத்தை முதலிய வசதிகள் உண்டு. இப்படிப்பட்ட

வசதிகள் மூன்ரும் வகுப்பு வண்டியில் இல்லை.

8. முற்காலத்தில் பல நாட்களாகச் செய்யவேண்டியிருந்த பிரயாணம், இரயில் வண்டியால் சில மணி நேரத்தில் முடிந்து விடுகிறது.

கேள்விகள்

1. நம்முடைய முன்ஞேர்கள் என்னென்ன வண்டிகளில் பிரயாணம் செய்தனர் ?

2. தற்காலத்தில் பிரயாணத்திற்கு உதவும் வண்டிகளையும் மற்றச் சாதனங்களையும் கூறு.

3. இரயில் வண்டித் தொடரை எவ்விதம் ஓடச் செய்கிருர்கள் ?

4. இரயில் வண்டித் தொடர் செல்ல இருப்புப் பாதை அமைக்கப்பட்டிருப்பது ஏன் ?

5. பயணச் சீட்டில் (டிக்கட்டில்) என்னென்ன குறிக்கப்பட்டிருக்கும் ?

பயிற்சி

1. வண்டி புறப்படுகிறது.
2. எஞ்சின் வண்டிகளை இழுக்கிறது.
3. இராட்டையில் நூல் நூற்கிருர்கள்.
4. குடிசைத் தொழில்களில் நூற்றல் சிறந்தது.

இத்தொடர்களிலுள்ள பெயர்ச் சொற்களையும் வினைச்சொற்களையும் தனித் தனியே எடுத்தெழுது.

14. நெற்பானையும் எலியும்

பாட்டியின் வீட்டுப் பழம் பானை—அந்தப்
பானை ஒரு புறம் ஓட்டையடா!
ஓட்டை வழியொரு சுண்டெலியும்—அதன்
உள்ளே புகுந்து நெல் தின்றதடா!

உள்ளே புகுந்து நெல் தின்று தின்று வயிறு
ஊதிப் புடைத்துப் பருத்ததடா!
மெள்ள வெளியில் வருவதற்கும்—ஓட்டை
மெத்தச் சிறிதாகிப் போச்சுதடா!

பானையைக் காலை திறந்தவுடன்—அந்தப்
பாட்டியின் பக்கமாய் வந்த ஒரு
பூனை எலியினைக் கண்டதடா!—ஓடிப்
போய் அதைக் கௌவியே சென்றதடா!

கள்ள வழியினில் செல்பவரை—எமன்
காலடி பற்றித் தொடர்வானடா!
உள்ளபடியே நடப்பவருக்குத்—தெய்வம்
உற்ற துணையாக நிற்குமடா!

—கவிமணி.

கேள்விகள்

1. எலி எவ்வாறு பானையின் உள்ளே நுழைந்தது?

2. பானையிலிருந்து வெளியே வர எலிக்கு ஏன் முடியவில்லை?

3. எலியின் முடிவு என்ன ஆனது?

4. இக்கதையால் நீ அறியும் உண்மை என்ன?

இலக்கணம்

கண்ணன் கற்கண்டு தின்றான். இத்தொடரில் செயல் தின்றான் என்பது. இச்சொல் இல்லாமல் இத் தொடர் அர்த்தம் முடியாது அல்லவா. இவ்வாறு ஒரு வாக்கியம் முடிவதற்கு உதவியாயிருப்பது 'பயனிலை யாகும்'. பயனிலையை வைத்துக்கொண்டு யார் அல்லது எது என்று கேட்டால் வரும் விடை எழுவாய். ஆகவே இவ்வாக்கியத்தில் 'கண்ணன்' எழுவாயாக இருக்கிறது.

கண்ணன் வந்து நின்றான்—இத்தொடரில் வந்து நின்றான்—இரண்டும் வினைச்சொற்களே. கண்ணன் வந்து—என்று சொன்னால் வாக்கியம் முடியவில்லை. கண்ணன் நின்றான் என்றால் வாக்கியம் முற்றுப்பெறு கிறது. இப்படித் தொழில் முற்றுப்பெற்ற வினை, முற்று வினை யென்றும் முற்றுப் பெறாத வினை, எச்சவினை யென் றும் சொல்லப்படும். வாக்கியத்தில் பயனிலையாக வருவது முற்றுவினையே.

பயிற்சி

எழுவாய் பயனிலைகளை எடுத்து எழுது:—

பையன் எழுதினான். பெண்கள் கும்மி அடித்தனர். ஆசிரியர் கற்பித்தார். செடி வளர்ந்தது.

15. தாய் எலியின் சொல் கேளாத குட்டி எலி

இரை தேட	வரும்வழியில்	எத்தனித்து
தொந்தரவு	அறிந்துகொண்டு	தவித்தது
பொறுக்க	புகுந்தால்	நேர்ந்த
எண்ணங்கொண்டு	அங்குமிங்கும்	கடமை

1. ஒரு வீட்டில் சில எலிகள் வளை தோண்டி அதில் தம் குட்டிகளுடன் வசித்து வந்தன. இரவில் இரை தேடச் செல்லும் பொழுது, எலிகள் தம் குட்டிகளையும் தம் முடன் அழைத்துச் செல்வது வழக்கம். அந்த வீட்டில் வசித்துவந்தவர்களுக்கு எலி களின் தொந்தரவு பொறுக்க முடியவில்லை. அவர்கள் எலிகளைப் பிடிப்பதற்கு எண்ணங் கொண்டு அவை வரும் வழியில் ஓர் எலிக் கூண்டை வைத்தனர். அந்த எலிக்கூண்டி னுள் இருக்கும் ஒரு கொக்கியில் ஒரு முறுக் குத் துண்டு கட்டப்பட்டிருந்தது.

2. இரவில் வழக்கம்போல் வெளியே வந்த எலிகள் எலிக்கூண்டைக் கண்டன. அது தங்களைப் பிடிப்பதற்காக வைக்கப் பட்ட பொறி என்பதை அறிந்துக் கொண்டு விலகிச் சென்றன. ஆனால் ஒரு குட்டி எலி அந்தக் கூண்டினுள்ளிருக்கும் முறுக்கைத் தின்ன விரும்பி, அதன் பக்கத்தில் போக

ஆரம்பித்தது. உடனே தாய் எலி அதை நோக்கி, "குழந்தாய், அக் கூண்டு நம்மைப் பிடிக்க வைக்கப்பட்டிருக்கும் பொறி ஆகும். நீ அதனுள்ளிருக்கும் முறுக்கைத் தின்ன விரும்பி அதைக் கௌவி இழுத்தால், அப் பொறியின் கதவு மூடிக்கொள்ளும். பிறகு உன்னால் வெளியே வரமுடியாது. நீ அதில் அகப்பட்டுக் கொண்டால் வீட்டுக்காரர்கள் உன்னைக் கொன்று விடுவார்கள்; அதன் பக்கம் தலை காட்டாதே" என்று சொல்லி அதைத் தன்னுடன் அழைத்துச் சென்றது.

3. எலிகள் அங்குமிங்கும் ஓடி இரை தேடித் தின்றுவிட்டு வளைக்குத் திரும்பி, படுத்து உறங்கின. ஆனால் குட்டி எலிக்கு அன்று தூக்கம் வரவில்லை. அது தன் தாய் தூங்கினதும்மெது



வாக எழுந்து வெளியே வந்து கூண்டின் பக்கம் சென்றது; மெதுவாகக் கூண்டினுள் நுழைந்து முறுக்கைக் கௌவி இழுத்தது. உடனே பொறியின் கதவு விலகி, 'படார்' என்று மூடிக்கொண்டது. குட்டி எலி வெளியே வர எத்தனித்தது; ஆனால்

வெளியே வர முடியவில்லை. தாய் சொல் கேளாததை நினைத்து அது வருந்தியது.

4. தாய் சொல் கேளாததால் நேர்ந்த துன்பத்தைக் கவனித்தீர்களா? தாய், தந்தை, பெரியோர் இவர்களின் சொற்படி நடப்பது சிறுவர், சிறுமிகளின் கடமையாகும்.

கேள்விகள்

1. எலிகள் இரவில் என்ன செய்வது வழக்கம்?

2. வீட்டிலிருந்தவர்கள் எலிகளைப் பிடிக்க என்ன செய்தனர்?

3. கூண்டினுள் போக விரும்பிய குட்டி எலிக்குத் தாய் எலி கூறியது என்ன?

4. எலிகள் எல்லாம் படுத்துத் தூங்கிய பிறகு குட்டி எலி என்ன செய்தது?

பயிற்சி

வாக்கியங்களில் அமைத்து எழுது :—

இரை தேட, வரும் வழியில், வழக்கம்போல், விலகி, அங்குமிங்கும்.

இலக்கணம்

எலி நெல்லைத் தின்றது. இத் தொடரில் பயனிலையைக் கொண்டு யாரை அல்லது எதனை என்று கேட்டால் வரும் விடை நெல்லை என்று ஆகிறதல்லவா. இப்படி வருவது செயப்படு பொருள் ஆகும். ஆகவே ஒரு வாக்கியத்தில் மூன்று உறுப்புகள் இருப்பதைக் காணலாம். அவை எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன.

எலிகள் சென்றன. இத்தொடரில் செயப்படு பொருள் இல்லை. ஆகவே, ஒரு வாக்கியம் வேண்டுமானால் எழுவாயும் பயனிலையும் அவசியமாகின்றன.

16. மூச்சு விடுதல்

தொடர்ந்து	உலாவுவது	உடற்பயிற்சி
மூச்சுவிடுகிறோம்	தூசு	வெப்பமாய்
சீரான	உஷ்ணநிலை	கெடுதல்
நுரையீரல்	விகாரம்	ஒருபொழுதும்

[மணியும் அவனுடைய மாமாவும் ஒரு நாள் மாலையில் உலாவப் போகிறார்கள். மாமா மிகவும் வேகமாக நடக்கிறார். மணி, நடையும் ஓட்டமுமாகத் தொடர்ந்து செல்கிறான்.]

மணி: மாமா, என்ன இவ்வளவு வேகமாக நடக்கிறீர்கள்? எனக்கு மூச்சு வாங்குகிறதே!

மாமா: அப்படியானால், ஓரிடத்தில் உட்காருவோம்.

[இருவரும் ஓரிடத்தில் உட்காருகிறார்கள்.]

மணி, உலாவுவது ஒருவித உடற்பயிற்சி ஆகும். உலாவும்பொழுது இவ்விதம் வேகமாக நடப்பதுதான் நல்லது.

மணி: ஏன்?

மாமா: வேகமாக நடந்தால் நாம் வேகமாகச் சுவாசிக்கிறோம் அல்லவா? அப்பொழுது நாம் அதிகமான காற்றை உட்கொள்கிறோம். சுத்தமான காற்றை நாம் சுவாசித்தால் நமது ரத்தமும் நன்றாகச் சுத்தமாகும்.

மணி: நாம் உட்கொள்ளும் காற்று எங்கே செல்கிறது மாமா?

மாமா: நமது மார்பில் நுரையீரல் என்று ஓர் உறுப்பு இருக்கிறது. அந்த இடத்திற்கு நாம் உட்கொள்ளும் காற்று செல்கிறது?

மணி: நாம் திரும்ப வெளியே மூச்சு விடுகிறோமே, அந்தக் காற்று எங்கேயிருந்து வருகிறது?

மாமா: அந்தக் காற்றும் நுரையீரலிலிருந்துதான் வெளிப்படுகிறது.

மணி: அப்படியானால் நாம் உட்கொள்ளும் காற்றுத்தான் நுரையீரலுக்குப் போய்த் திரும்பி வருகிறதோ?

மாமா: ஆம். ஆனால் நாம் உட்கொள்ளும் காற்று சுத்தமானது. வெளிவிடும் காற்று அசுத்தமானது. மணி, வாயால் மூச்சு விடுகிறாயே; அவ்விதம் வாயால் காற்றை உட்கொண்டு வெளியே விடக்கூடாது. மூக்கினாலேயே காற்றை உட்கொண்டு வெளியே விடவேண்டும்.

மணி: ஏன் காற்றை மூக்கினாலேயே சுவாசிக்க வேண்டும்?

மாமா: காற்றில் தூசி முதலியன இருக்கின்றன. நாம் மூக்கினால் காற்றை

உட்கொள்ளும் பொழுது மூக்கிலுள்ள உரோமம், ஈரம் இவை தூசு முதலியவற்றை உள்ளே செல்ல விடாமல் தடுத்துவிடும். தவிர, வெளியிலுள்ள காற்று சில சமயங்களில் குளிர்ந்து இருக்கும். சில சமயங்களில் வெப்பமாக இருக்கும். மூக்கினுல் சுவாசிக்கும்பொழுது உள்ளே செல்லும் காற்று சீரான உஷ்ண நிலையை அடையும். வாயால் மூச்சு விடுபவர்களின் தொண்டையில் ஒரு விதச் சதை வளரும். அவர்களுடைய முகமும் விகாரமடையும். தொண்டையில் சதை வளர்ந்தால் சரியாக மூச்சுவிட முடியாது.

மணி : தூசு முதலியன நுரையீரலுக்குள் போய்ச் சேர்ந்தால் கெடுதல் ஏதேனும் உண்டாகுமோ ?

மாமா : ஆம், தூசு முதலியன நுரையீரலுக்குள் சென்ருல் காசநோய் ஏற்படும்.

மணி : தொண்டையில் சதை வளர்ந்து விட்டால் என்ன செய்வார்கள் ?

மாமா : தகுந்த வைத்தியரைக் கொண்டு அச் சதையை அறுத்து எடுத்து விடுவார்கள். மணி, நேரமாகிறது ; வீட்டுக்குத் திரும்புவோம் புறப்படு.

[இருவரும் வீட்டுக்குத் திரும்பிப் போகிருர்கள்.]

கேள்விகள்

1. வேகமாய் மூச்சு விடுவதால் ஏற்படும் நன்மைகள் என்ன?

2. உட்கொள்ளும் காற்று எங்கே செல்கிறது?

3. வாயினால் ஏன் மூச்சுவிடக் கூடாது?

இலக்கணம்

நிற்கிறான், நிற்கிறாள், நிற்கிறது. இவற்றைக் கவனியுங்கள்.

இவற்றுக்கு எழுவாய் பார்த்தால் முறையே அவன், அவள், அது என்று விடை வருகிறதல்லவா. பெயர்ச் சொற்களில் ஆண், பெண், பலர், ஒன்று, பல என்று இருப்பதற்குத் தக்கபடி பயனிலை அமையும்.

முற்றுவினை அல்லது வினைமுற்றுத்தான் பயனிலையாக வருமென்று படித்தீர்கள். ஆகவே, வினைமுற்றுக்களை ஆண்பால் வினைமுற்று, பெண்பால் வினைமுற்று, பலர்பால் வினைமுற்று, ஒன்றன்பால் வினைமுற்று, பலவின்பால் வினைமுற்று என்று ஐந்து வகையாகக் கொள்ளலாம்.

கண்ணன் நிற்கிறது—இவ்வாக்கியம் பிழை. ஏன்? எழுவாய், ஆண்பால்—பயனிலை, ஒன்றன்பால்.

இவ்வாக்கியம் சரியாக வேண்டுமானால் ஆண்பால் வினைமுற்றாக இருக்கவேண்டும். அப்பொழுது கண்ணன் நிற்கிறான் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. வாக்கியங்களைச் சொல்லும்போது எழுவாயும் பயனிலையும் ஒரே இனமாகச் சேர்த்துச் சொல்லவேண்டும்.

17. தாலாட்டு

அமுதம்	புன்சிரிப்பு	சீமான்
தெவிட்டாக்கனி	திருமுகம்	திருக்குமாரன்

ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ.

1. தெள்ளமுத முண்டு
தெவிட்டாக் கனியுண்டெம்
உள்ளங் குளிர
உரையாடும் பைங்கிளியோ.

2. முல்லை நறுமலரோ
முருகவிழ்க்கும் தாமரையோ
மல்லிகைப் பூவோ
மருக்கொழுந்தோ சண்பகமோ.

3. நெஞ்சிற் கவலையெல்லாம்
நீங்கத் திருமுகத்தில்
புன்சிரிப்பைக் காட்டி எம்மைப்
போற்றும் இளமதியோ.

4. பாலை விரும்பினையோ
பணிகாரம் வேண்டினையோ
சோலைப் பசுங்கிளியே
சுந்தரமே சொல்லியழு.

5. தித்திக்கும் தேனும்
 தினை மாவும் கொண்டுன்றன்
அத்தை வருவாள்
 அழவேண்டாம் கண்மணியே.

6. மாங்கனியும் நல்ல
 வருக்கைப் பலாக்கனியும்
வாங்கி உன் அம்மான்
 வருவார் அழவேண்டாம்.

7. ஆரடித்தார் நீ அழுதாய்
 அடித்தாரைச் சொல்லியழு
சீரெடுத்த செல்வச்
 சீமான் திருக்குமரா.

—கவிமணி.

கேள்விகள்

1. அம்மான் குழந்தைக்கு என்னென்ன கொண்டு வருவார்?

2. அத்தை குழந்தைக்கு என்னென்ன வாங்கி வருவாள்?

3. ஒரு குழந்தை தன் தாய்க்கு என்னென்னவாகக் காண்கிறது?

இலக்கணம்

கீழ்க்கண்ட எழுவாய் பயனிலைகளைச் சரியாகப் பொருத்து :—

வேலன்	வளர்ந்தது.
மரம்	வளர்ந்தன.
பையன்கள்	வளர்ந்தார்.
கன்றுகள்	வளர்ந்தாள்.
செல்லம்மாள்	வளர்ந்தார்கள்.

18. கவிமணி

கவிஞர்	தமிழ்ப்பயிற்சி	போற்றினர்கள்
அறிஞர்கள்	ஆராய்ச்சி	உயர்கலாசாலை
தவப்பயனாய்	பட்டஞ் சூட்டினர்	மதிக்கப்பெற்று
கல்லூரி	நட்புக் கொண்டார்கள்	படிக்கத்தக்க

தமிழ் நாட்டுக் கவிஞருள் ஒருவர் நம் கவிமணி. இவர் பெயர் சி. தேசிக விநாயகம் பிள்ளை என்பது. இவர் பாடல்களைச் சிறுவர் முதல் பெரியோர் வரை எல்லோரும் கேட்டும் படித்தும் மகிழ்வர். கற்றோர்க்கு மட்டும் அல்லாமல் கல்லார்க்கும் இவர் பாடல்கள் இன்பம் தரும். இப்படிப்பட்ட பாடல்கள் இயற்றும் திறமை உடைய இவரை அறிஞர்கள் பாராட்டினர்கள். கவிமணி என்று பட்டஞ் சூட்டினர்.

இவர் பிறந்த ஊர் தேரூர். இது கன்னியாக்குமரி மாவட்டத்தில் சுசீந்திரம் என்னும் ஊருக்கு அருகிலுள்ள கிராமம். இவர் தந்தையார் திரு. சிவதாணுப்பிள்ளை அவர்கள். தாயார் ஆதிலட்சுமி அம்மையார். இவ்விருவரது தவப்பயனாய் நமது கவிமணி 1876-ம் வருடம் ஆடி மாதம் 14-ம் நாள் பிறந்தார்.

இவர் தந்தையார் திருவாங்கூர் மன்னரால் மதிக்கப்பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர். குடும்பப் பெருமைக்குத் தக்கபடி நமது கவிஞரும் சிறுவயதிலேயே நல்ல ஒழுக்கமும் அறிவும் பெற்று விளங்கினர். தன் ஊரிலிருந்து தினமும் நான்கு மைல் தூரம் நடந்துசென்று கோட்டாறு உயர் கலாசாலையில் படித்து வந்தார். இவர் படித்தபொழுது பள்ளிக்கூடங்களில் மலையாளமே கற்றுத் தந்தனர். இருந்தாலும் தமிழ் மொழியில் பற்றுக் கொண்ட இவர் தமிழையும் தனியாகக் கற்றுவந்தார்.

இவரது ஊரின் அருகே ஓர் ஏரி இருக்கிறது. அந்த ஏரியின் நடுவாக வாணன் திட்டு என்ற இடம் உண்டு. அங்கே திருவாவடுதுறை மடம் ஒன்று இருக்கிறது. அப்பொழுது அங்கு வாழ்ந்த சாந்தலிங்கத் தம்பிரான் அவர்கள் கவிமணியின் தமிழ்ப் படிப்புக்கு மிகவும் உதவி புரிந்தார்.

ஆறும் படிவம் படித்து முடிந்ததும் கல்லூரியில் சேர்ந்தார். ஆனல் சில காரணங்களால் தொடர்ந்து படிக்க முடியாமற் போய்விட்டது. பின் ஆசிரியர் பயிற்சி பெற்றுத் தேறினர். பெண்கள் பள்ளியில் தமிழ் ஆசிரியராக வேலை பார்த்தார். கல்வியாலும் ஒழுக்கத்தாலும் மேலதிகாரிகளின்

மதிப்பைப் பெற்ருர். அதன் பயனுய்த் திருவனந்தபுரம் அரசர் பெண்கள் கல்லூரியில் தமிழாசிரியராக அமர்த்தப்பட்டார். நாகர் கோவிலையடுத்துள்ள புத்தேரி என்ற கிராமத்தில் வாழ்ந்த உமயம்மையைப் பெரியோர்கள் இவர்க்கு மணஞ்செய்து வைத்தார்கள்.

சிறுவயதிலேயே கவி இயற்றும் பழக்கம் இவர்க்கு உண்டு. கல்வெட்டு ஆராய்ச்சியிலும் பழகினுர். தனது அறிவுக்கூர்மையால் அதிலும் தேர்ச்சி பெற்ருர். இவரது ஆராய்ச்சி சரித்திர ஆசிரியர்க்கு மிகவும் உதவி செய்தது.

இவர் இயற்கையைக் கண்டு இன்பம் அடைபவர். சிறுவரும் படிக்கத் தக்க இனிய பாட்டுக்கள் பல இயற்றியுள்ளார். இவரது பாடல்கள் எல்லாவற்றையும் சேர்த்து 'மலரும் மாலையும்' என்ற பெயரோடு வெளியிட்டுள்ளார்.

வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு புத்தேரியில் வாழ்ந்துவந்தார். தமிழ்நாட்டுப் பெரியார்கள் அனைவரும் இவருடன் நட்புக் கொண்டார்கள். நோய்வாய்ப்பட்ட இவர் தமது 78-ம் வயதில் காலமானுர்.

இவர் பாடல்களில் கோழிப் பாட்டு, கிளிப்பாட்டு, அம்புலிப் பாட்டு, தாலாட்டுப்

பாட்டு, பசுப்பாட்டு, எலிப்பாட்டு முதலி யவை சிறுவர் சிறுமிகளுக்குக் களிப்பைத் தரக்கூடியவை.

கேள்விகள்

1. கவிமணி என்பவர் யார் ?
2. அவருக்கு இப்பெயர் எதனால் ஏற்பட்டது ?
3. கவிமணி தமிழ் கற்க உதவியவர் யாவர் ?
4. கவிமணி எங்கெங்கு வேலைப் பார்த்தார் ?
5. கவிமணி பாடல்களில் உங்களுக்குப் பிடித்தவை யாவை ?

இலக்கணம்

நான் எழுதுகிறாய். நீ எழுதுகிறேன்.

இவ்வாக்கியங்கள் பிழையானவை. ஏன் ? நான் என்பது சொல்கின்றவனைக் குறிக்கிறது. இது தன்மைப் பெயர். எழுதுகிறாய் என்பது முன்னே நிற்பவனது செயலைக் குறிக்கும் வினை. இது முன்னிலை வினை. இது போலவே, நீ—முன்னிலைப் பெயர். எழுதுகிறேன்—தன்மை வினை.

இவ்வாக்கியங்கள் சரியாக வேண்டுமானால் முன்னிலை எழுவாய்க்கு முன்னிலை வினையும், தன்மை எழுவாய்க்குத் தன்மை வினையுமாகச் சேர்த்து நான் எழுதுகிறேன், நீ எழுதுகிறாய் என்று சொல்ல வேண்டும்,

பேசுபவன்—தன்மை, கேட்பவன்—முன்னிலை.

யார் அல்லது எதைப்பற்றிச் சொல்லப்படுகிறதோ அது படர்க்கை.

இவ்வாறு இடங்கள் மூன்று உண்டு.

19. நிறுத்தக் குறிகள்

அவசரமாக	அடையாளம்	நன்று
சுருக்கமாக	இமைக் காலம்	குறிகள்
குறிக்கும்	பூரணமான	தோன்ற

பிள்ளைகளே! நீங்கள் வாசிக்கும் பொழுது நிறுத்தக் குறிகளைக் கவனிக்க வேண்டும். சில பிள்ளைகள் இக் குறிகளைக் கவனியாமல் அவசரம் அவசரமாக வாசிக்கிறார்கள். இதனால் வாசிப்பவர்களுக்கும் வாசிக்கும் பாடத்தின் பொருள் நன்றாக விளங்குவதில்லை; கேட்பவர்களுக்கும் அது நன்கு வெளிப்படுவதில்லை; வாசிக்கும் பொழுது நீங்கள் கவனிக்க வேண்டிய முக்கியமான நிறுத்தக் குறிகள் நான்கு. அவையாவன:

, இது காற்புள்ளி. இது எல்லாவற்றிலும் சுருக்கமாக நிறுத்துவதைக் குறிக்கும். பாடங்களின் நடுவில் இந்த அடையாளம் வந்தால் ஒரு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும். ஒரு தடவை கண் இமைக்கும் கால அளவை மாத்திரை என்கிறோம்.

; இது அரைப்புள்ளி. காற்புள்ளிக்கு அடுத்த சுருக்கமான நிறுத்தலைக் குறிப்பது இது. இதற்கு இரண்டு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

: இது முக்காற் புள்ளி. அரைப் புள்ளிக்கு அடுத்த நிறுத்தலைக் குறிப்பது இது. இங்கே மூன்று மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

. இது முற்றுப்புள்ளி. இது பூரணமான நிறுத்தலைக் குறிப்பது. இது ஒரு வாக்கியம் முடிந்ததைக் குறிக்கும். இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்துவது நன்று.

இந்த நான்கு முக்கியமான நிறுத்தக் குறிகளைத் தவிர, வேறு இரண்டு குறிகளும் உண்டு. அவை வினாக் குறி என்றும் உணர்ச்சிக் குறி என்றும் சொல்லப்படுகின்றன.

? இதைத்தான் **வினாக்** குறி என்று சொல்லுகிறோம். **வினா** என்பது கேள்வி. கேள்வியாக அமைந்திருக்கும் வாக்கியங்களின் முடிவில் இக் குறி காணப்படும். நாம் ஒருவரிடம் கேள்வி கேட்பது போல வாசிக்கவேண்டும் என்பது இக்குறியின் பொருள். இக் குறியிட்ட இடத்திலும், முற்றுப்புள்ளி இட்ட இடத்தைப்போல் நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

! இதை **உணர்ச்சிக் குறி** என்று சொல்கிறோம். இது ஆச்சரியம், துக்கம் முத

லியவற்றைக் குறிக்கும் வாக்கியங்களின் முடிவில் அமைக்கப்படுகிறது. தவிர ஆச்சரியம், துக்கம் முதலியவற்றைத் தெரிவிக்கும் வார்த்தைகளுக்குப் பின்னுலும் இக்குறியை இடுவது உண்டு. இக் குறி இடப்பட்ட இடத்தில் மூன்று அல்லது நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

கேள்விகள்

1. முக்கியமான நான்கு நிறுத்தக் குறிகள் எவை?

2. நிறுத்தக் குறிகளைக் கவனித்து வாசிக்க வேண்டிய அவசியம் என்ன?

3. ஒரு மாத்திரை நேரம் என்பது என்ன?

4. நிறுத்தக் குறிகளையும் அவையுள்ள இடத்தில் நிறுத்த வேண்டிய நேரத்தையும் கூறு?

பயிற்சி

1. பின்வரும் வாக்கியங்களில் தகுந்த இடங்களில் காற்புள்ளி, முற்றுப்புள்ளி, விஞக்குறி, உணர்ச்சிக்குறி இவைகளை அமைக்க :—

(அ) நல்ல மாதிரிப் பூஞ்செடிகள் டில்லி கல்கத்தா உதகமண்டலம் பெங்களூர் முதலிய இடங்களிலுள்ள சர்க்கார் தோட்டங்களில் விற்கப் படுகின்றன

(ஆ) ஆ இந்தப் பூ எவ்வளவு பெரியது

(இ) இந்தப் பூவை நீ எங்கே வாங்கிஞய்

2. முந்தின பாடத்தில் அரைப்புள்ளி வந்துள்ள ஒரு வாக்கியத்தை எடுத்து எழுது.



20. கையெழுத்து

ஆத்திரப்படாமல்	வரிகோணுமல்	கூனிப்போகும்
பிறர்	பழகுதல்	இடக்கைப் பக்கம்
எளிதாக	எழுதுகோல்	சிறு பிராயத்தில்

1. பிள்ளைகளே! நீங்கள் பென்சில் அல்லது பேனுவின் உதவியால் எழுதும் எழுத்திற்குக் கையெழுத்து என்று பெயர். நீங்கள் எழுதும்போது, ஆத்திரப்படாமல் நிறுத்தி எழுதுங்கள். ஒவ்வொரு எழுத்தையும் நன்ருய் அமைத்து எழுதுங்கள். நீங்கள் எழுதும் எழுத்தைப் பிறர் எளிதாக வாசிக்க வேண்டும்.

௨. வரி கோணுமல் அழகாக எழுதப் பழகுதல் வேண்டும். சொற்களுக்கு இடையிலும் வாக்கியங்களுக்கு இடையிலும் இடம்

விட்டு எழுதல் வேண்டும். எழுதும்போது வேண்டிய வெளிச்சம் இடது கைப் பக்க மிருந்து வரவேண்டும். அப்படியாயின் நீங்கள் எழுதிக் கொண்டு செல்லும்போது எழுத்துக்களின் மீது எழுதுகோலின் நிழல் விழாது வலது கைப் பக்கமிருந்து வெளிச் சம் வந்தால் எழுதுகோலின் நிழல் எழுத்துக் களின் மேல் விழுந்துகொண்டு வரும். சரியானபடி இடம் விட்டு எழுதமுடியாது.

3. ஒரு வாக்கியம் முடிந்தவுடன் தகுந்த நிறுத்தக் குறி இடவேண்டும். அப் பொழுதுதான் வாக்கியம் முடிந்து விட்டது என்பது தெளிவாகத் தெரியும்.

4. வரிகளை நெருக்கி எழுதலாகாது. முதலில் எழுதப் பழகும்பொழுது கோடுகள் போட்டு, அக்கோடுகளின் மேல் எழுதப் பழகுதல் வேண்டும்.

5. நீங்கள் நேராக நிமிர்ந்து உட் கார்ந்து எழுதுகோலையும் நேராகப் பிடித்து எழுதுதல் வேண்டும். கோணி உட்கார்ந்து எழுதினால் எழுத்தும் கோணும்; முதுகும் கூனிப் போகும்.

6. இடது கைப் பக்கத்து ஓரத்தில் சிறிது இடம் விட்டு எழுதுதல் வேண்டும். இவ்விதம் சிறு பிராயத்திலேயே பழகினால் கையெழுத்து நன்றாய்த் திருந்தும்.

கேள்விகள்

1. கையெழுத்து என்றால் என்ன ?

2. எழுதும்பொழுது கவனிக்க வேண்டியவை எவை ?

3. எழுதும்பொழுது எவ்விதம் உட்கார்ந்து எழுத வேண்டும் ?

பயிற்சி

1. கேசவன் எழுதுகிறான்.
2. கேசவன் எழுதுகிறானா ?
3. கேசவன் எவ்வளவு அழகாக எழுதுகிறான் !

மேற்கண்ட வாக்கியங்கள் முடியும் இடங்களைக் கவனி.

1-வது வாக்கியத்தின் முடிவிலுள்ள புள்ளிக்கு முற்றுப்புள்ளி என்று பெயர்.

2-வது வாக்கியத்தின் முடிவிலுள்ள அடையாளத்திற்கு வினாக்குறி என்று பெயர்.

3-வது வாக்கியம் ஆச்சரியத்தைத் தெரிவிக்கிறது. அதன் முடிவிலுள்ள அடையாளத்திற்கு உணர்ச்சிக் குறி என்று பெயர்.

. முற்றுப்புள்ளி
? வினாக்குறி
! உணர்ச்சிக் குறி

இந்த நிறுத்தக் குறிகள் ஒவ்வொன்றும் வாக்கியம் முடிந்துவிட்டது என்பதைக் காட்டும்.

கீழ்க்கண்ட வாக்கியங்களின் முடிவில் தகுந்த நிறுத்தக் குறிகளை இடுக.

1. நான் நேற்றுப் பள்ளிக்கூடம் போனேன்
2. நீ நேற்றுப் பள்ளிக்கூடம் போனாயா
3. அந்தப் பேனாவின் விலை என்ன
4. அது எவ்வளவு நேர்த்தியான பேனா



21. ஈ

சின்னஞ்சிறிய	எளிதாக	உருவம்
பின்வருமாறு	ஆதியில்	தொடங்கின
அடிப்புறத்தில்	கொழுத்த	நோய்கள்
அடர்ந்து	இயன்றவரை	கவனக் குறை

1. சின்னஞ் சிறிய பிராணிகளில் ஈயும் ஒன்ருகும். எனினும், அது பூச்சிகளில் கொடியது என்று சொல்லலாம். ஈ பேசக் கூடுமாளுல் அது தன் கதையைப் பின் வருமாறு சொல்லும்.

2. நான் சாதாரணமாக உங்கள் வீட்டில் வசிக்கும் ஒரு பிராணி. எனக்கு இரண்டு இறக்கைகள் உண்டு; ஆறு கால்களும் உண்டு. மனிதர்கள் பறக்க மாட்டார்கள். நாஞே பறந்து திரிவேன். என் தலை சிறியதாக இருக்கும்; அதில் சிவப்பான இரண்டு கண்கள் உண்டு. நான் எந்தப் பக்கத்திலும் பார்ப்பேன்.

3. என் உடல் மூன்று பிரிவுகள் உடையது. முதற் பிரிவு தலை; இதில் கண்களும் வாயும் இருக்கின்றன. இரண்டாம் பிரிவு மார்பு; இதில் கால்களும் இறக்கைகளும் இருக்கின்றன. மூன்ரும் பிரிவு வயிறு. என் கால்களின் அடிப்புறத்தில் சிறு மயிர்கள் அடர்ந்து இருக்கின்றன. இவைகளில் அசுத்தங்கள் எளிதாக ஒட்டிக் கொள்கின்றன.


முட்டையிலிருந்து வெளிவந்த புழு

இரண்டு வாரத்திற்குபின் புழு

4. ஆதியில் நான் ஒரு சிறு வெள்ளை முட்டையாக இருந்தேன். பிறகு 12 அல்லது 24 மணி நேரத்திற்குள் பொரிந்து சிறிய வெண்மை நிறமான புழுவாக மாறினேன். அப்பொழுது எனக்குப் பசி அதிகமாக ஏற்பட்டது. கிடைத்த உணவை எல்லாம் இயன்றவரையில் தின்றேன். என் தோல் சுருங்கிக்கொண்டே வந்தது. இதனுல் என் உருவம் மாறிப்போயிற்று. கூட்டில் அடைபட்டது போல் அசைவில்லாமல் இருந்தேன். அப்பொழுது இறக்கைகளும் கால்களும் வளரத் தொடங்கின. பிறகு எனக்குத்

தலேயும் வாயும் கண்களும் இருப்பதாகத் தெரிந்து கொண்டேன்.

5. என்னைப் போன்ற ஈக்களால் பல நோய்கள் பரவுகின்றன. சீதபேதி, வயிற்றுப் போக்கு முதலிய வியாதிகளை நாங்கள் பரவச் செய்கிறோம் என்றும் எங்களால் ஆயிரக் கணக்கான மக்கள் இறப்பதாகவும் வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் இதற்குக் காரணம் மனிதர்களின் கவனக் குறைவே யாகும்.

6. தேனீக்களும் எங்கள் இனத்தைச் சேர்ந்தவைகளே. அவை பூக்களிலிருந்து தேனை எடுத்து வந்து கூட்டில் சேர்க்கின்றன. தேனீக்களின் கூட்டின் அருகில் நீங்கள் சென்றால் அவை உங்களைக் கொட்டும். அவற்றின் உடம்பின் பின் பாகத்தில் ஒரு கொடுக்கு உண்டு. அந்தக் கொடுக்கினாலேயே அவை உங்களைக் கொட்டும்.

7. தேனீக்கள் தங்கள் உணவுக்காகச் சேர்த்து வைக்கும் தேனை நீங்கள் எடுத்து உபயோகிக்கிறீர்கள். இக்காலத்தில் சிலர் தேனீக்களைக் கூடுகளில் வளர்க்கின்றனர்.

கேள்விகள்

1. ஈயின் வளர்ச்சிப் பருவங்கள் எவை ?
2. ஈக்களால் பரவும் நோய்கள் எவை ?
3. தேனீக்கள் நமக்கு எவ்விதம் உதவுகின்றன ?

இலக்கணம்

1. அரசி, மனைவி, தாய், வேலைக்காரி, மகள்—இவைகளின் ஆண்பாற் பெயர்களை எழுது.

2. பிச்சைக்காரன், குருடன், பேரன்—இவைகளின் பெண்பாற் பெயர்களை எழுது.

3. இச்சொற்களை எழுவாயாக வைத்து வாக்கியங்கள் எழுது.

நான், நாங்கள் ; நீ, நீங்கள் இச்சொற்கள் ஆணு, பெண்ணு என்று சொல்லமுடியாது. ஆனால் ஒருமையா, பன்மையா என்று சொல்லமுடியும். ஆகவே, தன்மை முன்னிலைப் பெயர்களுக்குப் பால் வேறுபாடு கிடையாது.

பயிற்சி

1. கீழ்க்காணும் எழுவாய் பயனிலைகளைச் சரியாகச் சேர்.

நாங்கள்	நின்றது
கண்ணன்	நின்றார்கள்
செடிகள்	நிற்கிறீர்கள்
கண்ணம்மாள்	நிற்கிறோம்
மாணவர்கள்	நிற்கிறான்
நீங்கள்	நிற்கிறாள்
மாடு	நிற்கின்றன

2. மேலேயுள்ள பெயர்கள் ஒவ்வொன்றுக்கும் திணை, பால், இடம் சொல்.

22. பறவைக் கூடு

புகாதபடி	திறமையாக	வலுத்து
நேர்த்தியாக	கவனமாக	இழை
ஆயுதங்கள்	அரண்மனை	மெல்லிய

1. சில பெரிய மரங்களின் நுனிக் கிளைகளில் குருவிக் கூடுகள் பூக்குடலைகள்போல் தொங்கிக் கொண்டிருப்பதைக் காணலாம். எவரும் எட்டிப் பிடித்துக் கொள்ளாமலிருக்

கும்படி குருவிகள் அவ்வளவு உயரத்தில் கூடுகளைக் கட்டுகின்றன. மழை அடைத்துப் பெய்தாலும் கூடுகளுக்குள் நீர்த்துளி சிறிதும் புகாதபடி அவை அமைக்கப்படுகின்றன.

2. பறவைக் கூடுகள் பறவைகளுக்கு வசதியாக இருப்பதோடு பார்வைக்கு நேர்த்தியாகவும் இருக்கின்றன. நாம் வீடு கட்டி வாழ்வதுபோல பறவைகள் கூடு கட்டி வாழ்கின்றன. நாம் வீடு கட்டுவதற்குச் செங்கல், சுண்ணும்பு, மரம் முதலியவற்றை உபயோகிக்கின்ருேம். பறவைகளோ நார், வைக்கோல், கோரைப்புல், முள், சுள்ளி, தழை முதலியவற்ருல் தங்கள் கூடுகளை அமைத்துக் கொள்ளுகின்றன. நாம் வீடு கட்டுவதற்குப் பல வகையான ஆயுதங்களை உபயோகிக்கிருேம். ஆனல் பறவைகள் தங்கள் கூர்மையான அலகிலுலேயே அழகான வீடுகளைத் திறமையாகப் பின்னிவிடுகின்றன.

3. நாம் வீடு கட்டுவதற்கு வசதியாகவுள்ள இடத்தைத் தேடிக் கண்டு பிடிக்கிருேம் அல்லவா? அப்படியே பறவைகளும் கூடுகள் கட்டுவதற்காக வசதியான இடம் வேண்டுமென்று மரத்திற்கு மரம் தேடிப் பார்க்கின்றன. கீழே விழாதபடி வீடுகளை நாம் கவனமாக அமைத்துக் கட்டுவதுபோல், பறவைகளும் தங்கள் கூடுகள் இலகுவில் கீழே விழுந்து விடாதபடி அவற்றை அதிகக் கவனமாக அமைக்கின்றன. நாம் பலவகையான வீடுகள்

கட்டுவதுபோல், பறவைகளும் பலவிதமான கூடுகளைக் கட்டுகின்றன.

4. பறவைக் கூடுகளில், ஓர் அரண்மனைபோல் இருப்பது தூக்கணங் குருவியின் கூடு. நாம் துணி நெய்வதுபோல் இக்குருவியும், வலுத்து மெல்லியதாயிருக்கும் நார் இழைகளைக் குறுக்கும் நெடுக்குமாக ஓட்டித் தன் கூட்டை அழகாக முடைகிறது. இதனால் இக் குருவியை 'நெசவுக்காரப் பறவை' என்றும் சொல்லலாம்.

5. மனிதர்களில் சோம்பேறிகள் இருப்பதுபோல், பறவைகளிலும் சில சோம்பேறிகள் காணப்படுகின்றன. இப்பறவைகளுக்குக் கூடு கட்டவேண்டும் என்ற விருப்பமே இருப்பதில்லை.

கேள்விகள்

1. பறவைகள் எங்குக் கூடுகளைக் கட்டுகின்றன?

2. பறவைகள் எவற்றால் தங்கள் கூடுகளை அமைத்துக் கொள்ளுகின்றன?

3. பறவைகள் கூடு கட்டுவதை எந்த வகையில் நாம் வீடு கட்டுவதற்கு ஒப்பிடலாம்?

4. நெசவுக்காரப் பறவை என்பது எது? காரணம் என்ன?

பயிற்சி

1. மழை அடைத்துப் பெய்தாலும்—அர்த்தம் என்ன?

2. மரத்திற்கு மரம், குறுக்கும் நெடுக்குமாக—வாக்கியங்களில் அமைத்து எழுது.

23. மழை

மட்கலம்	சஞ்சரிக்கின்றன	தானம்
ஊற்றி	திரவப் பொருள்	ஆவி
மாரி	வற்றிப்போகிறது	சொற்பமாக

1. பகல் வேளையில் வெயில் காயும் பொழுது ஒரு மட்கலத்திலே கொஞ்சம் தண்ணீர் ஊற்றி அதை வெயிலில் வைத்துப் பாருங்கள். சற்று நேரத்திற்குள் அந்தத் தண்ணீர் வற்றிப் போகிறது அல்லவா? வேறொரு பாத்திரத்தில் தண்ணீரை எடுத்



துக்கொண்டு அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சிப் பாருங்கள். சிறிது நேரத்தில் அப் பாத்திரத்திலுள்ள தண்ணீரும் வற்றிப் போகிறது. இவ்விதமாக வற்றிப் போகும் தண்ணீர் எங்கே சென்று மறைந்து விடுகிறது.

2. தண்ணீரைக் காய்ச்சும் பாத்திரத்திற்குச் சற்று உயரத்தில் குளிர்ச்சி பொருந்திய பொருளாகக் கற்பலகை ஒன்றைப் பிடித்துப் பாருங்கள். அதன்மீது நீர்த் துளிகள் படிவதைக் காண்பீர்கள். தண்ணீரைக் காய்ச்சியவுடன் அது ஆவியாய் மாறி மேலே போகிறது. அந்த ஆவி கற்பலகையின் மேற்பட்டுக் குளிர்ச்சி அடைந்து, மீண்டும் தண்ணீராக மாறிவிடுகிறது. இப்படி மாறினவுடன் அதை நாம் நீர்த் துளிகளாகப் பார்க்கிறோம்.

3. நெருப்பின் வெப்பத்தால் தண்ணீர் ஆவியாக மாறிப் போவதைப்போல், வெயிலிற் காயும் நீரும் சூரிய வெப்பத்தால் நீராவியாக மாறி ஆகாயத்தில் செல்லுகிறது. அந்த நீராவி நமது கண்களுக்குத் தோன்றுவதில்லை. இப்படியே கடல் நீரும் சூரிய வெப்பத்தால் நீராவியாக மாறிச் செல்லுகிறது. இந்த நீராவி சாதாரணக் காற்றைக் காட்டிலும் இலேசானது. ஆகையால், அது மேலே செல்லுகிறது. இவ்விதமாக ஆறு, ஏரி, கடல் முதலிய நீர் நிலைகளிலுள்ள தண்ணீர் நாள்தோறும் சூரிய வெப்பத்தால் நீராவியாக மேலே சென்றுகொண்டிருக்கிறது. இந்நீராவி எக் காரணத்

திலைாவது குளிர்ச்சி அடைந்தால், அது நமது கண்ணுக்குத் தோன்றும் கருமையான உருவத்தை அடைகிறது. இவ்வுருவத்தை அடையும் நீராவித் திரட்சியைத்தான் மேகம் என்று சொல்கிறோம்.

4. மேகங்கள் பூமிக்குமேல் இரண்டு அல்லது மூன்று மைல் உயரத்தில் செல்லு கின்றன. பஞ்சு முதலிய இலேசான பொருள் கள் காற்றில் பறப்பதுபோல், மேகங்களும் காற்றினல் அங்கும் இங்கும் அலைந்து திரிகின்றன. இந்த மேகங்களின் மீது குளிர்ந்த காற்று வீசும்பொழுது மேகத்தி லுள்ள நீராவி குளிர்ச்சியடைகிறது. நீராவி சாதாரணக் காற்றைவிட இலேசாக இருப் பினும் தண்ணீர் அதிகக் கனமுள்ளதாகை யால் மழையாகப் பூமியில் விழுகின்றன. மலைகளில் பெய்யும் மழைத் தண்ணீர் அருவியாகவும், சிற்றாருகவும், பேராருகவும் பெருகி நமது பூமியைச் செழிப்பாக்குகிறது.

5. மலைகளும் காடுகளும் இல்லாத இடங்களில் மழை சொற்பமாகவே பெய்யும். காலம் தவருது மழை பெய்தால், மனிதர்கள் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள் களைப் பெற்று மகிழ்ச்சி அடைவார்கள். 'வானம் சுருங்கில் தானம் சுருங்கும்', 'மாரி

அல்லது காரியம் இல்லை', 'மழை பெய்தால் மண் சிறக்கும்' முதலான பழமொழிகள் நமக்கு மழை எவ்வளவு இன்றியமையாதது என்பதை வெளியிடுகின்றன.

கேள்விகள்

1. நீராவி மேல் நோக்கிச் செல்லுவதன் காரணம் என்ன ?

2. மேகங்கள் எவ்விதம் ஏற்படுகின்றன ?

3. மழை இன்றியமையாதது என்பதைத் தெரிவிக்கும் பழமொழிகளை எழுது.

பயிற்சி

1. மட்கலம், தண்ணீர், கனமுள்ளதாகையால்—பிரித்து எழுது.

2. ஆறு, ஏரி, கடல் முதலிய நீர் நிலைகளிலுள்ள தண்ணீர் நாள்தோறும் சூரிய வெப்பத்தால் நீராவியாகி மேலே சென்று கொண்டிருக்கிறது.

இந்த வாக்கியத்தின் எழுவாய் பயனிலை எழுது.

இலக்கணம்

1. பசு வீட்டிற்குச் செல்கிறது. இது தொழில் நடந்து கொண்டிருப்பதைத் தெரிவிக்கிறதல்லவா. இதனை நிகழ்காலம் என்று சொல்கிறோம்.

இதே தொழில் நடந்து முடிந்துவிட்டால் செல்கிறது என்பதற்குப் பதிலாகச் சென்றது எனச் சொல்கிறோம். தொழில் முடிந்ததற்கு இறந்த காலம் என்று பெயர்.

இனி நடக்கப் போவதானால் 'செல்லும்' எனச் சொல்கிறோம். நடக்கப் போவதற்கு வருங்காலம் அல்லது எதிர் காலம் என்று பெயர்.

ஆகவே, வினைச் சொற்கள் இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் என்று மூன்று காலங்களிலும் வரும்.

2. வினை, முற்று வினை அல்லது வினை முற்று என்றும், எச்ச வினை என்றும், இரண்டு வகைப்படும் என்று படித்தீர்கள்.

3. கிளை முறிந்து விழுந்தது.

முறிந்த கிளையை வெட்டினான்.

'விழுந்தது', 'வெட்டினான்' முற்றுப் பெற்ற அர்த்தத்தைக் கொடுக்கும் வினைச் சொற்கள். ஆகையால் இவை வினை முற்றுக்கள் ஆகும்.

'முறிந்து', 'முறிந்த' இவைகளும் வினைச் சொற்கள் தான். இவற்றில் அர்த்தம் பூர்த்தியாகவில்லை. இவ்விதம் அர்த்தம் பூர்த்தியாகாத வினைச் சொற்களுக்கு எச்ச வினைகள் என்பது பெயர்.

'முறிந்து' என்ற எச்சவினை 'விழுந்தது' என்ற வினைச் சொல்லைக்கொண்டு முடிகிறது. இவ்விதம் பெயர்ச் சொல்லைக்கொண்டு முடியும் எச்சவினைக்கு வினை எச்சம் என்பது பெயர்.

'முறிந்த' என்ற எச்சவினை 'கிளையை' என்ற பெயர்ச் சொல்லைக்கொண்டு முடிகிறது. இவ்விதம் பெயர்ச் சொல்லைக்கொண்டு முடியும் எச்சவினைக்கு பெயர் எச்சம் என்பது பெயர்.

பின்வரும் வாக்கியங்களிலிருந்து வினைமுற்று, பெயர் எச்சம், வினை எச்சம் இவைகளை எழுது.

1. அவன் வாங்கின கற்பலகை உடைந்தது.
2. கேசவன் பந்தை எடுத்து வீசினான்.

24. மழையின் சிறப்பு

நல்ல மழை பெய்ததனுல்
நாடும் செழித்தனவே ;
பூமி குளிர்ந்தனவே
பொய்கை நிரம்பினவே ;
ஏரிகள் நிரம்பி எதிர்க்கிறதே
வேக வெள்ளம்.
மடுக்கள் நிரம்பி வழிகிறதே
வெள்ளமெங்கும் ;
ஆறுகள் நிரம்புவதால்
அடைபடும் வெகு சனங்கள் ;
கழனிகள் நிரம்பிக்
கால்வாய்கள் தாம் நிரம்பி ;
ஊற்றுக்கள் தாம் சுரந்து
ஓடிற்றே சலம் விசையாய்.
தடாகங்கள் தாம் நிரம்பித்
தாமரைகள் பூத்தனவே ;
வயல்கள் நிரம்பி
வாய்க்காலும் தாஞேடி
உலர்ந்த மரங்களெல்லாம்
உயிருண்டாய்த் தளிர்த்தனவே ;
அடியற்ற மரங்களெல்லாம்
அன்பாய்த் தளிர்த்தனவே ;
இலையும் தளிர்களெல்லாம்
ஏகமாய்த் தளிர்த்தனவே ;

காடு செடிகளெல்லாம்
கனக்கவே தாம் தழைக்கும்
செடிகள் மரங்களெல்லாம்
செழித்துத் தழைத்தனவே ;
பூவா மரங்களெல்லாம்
பூத்துச் சொரிந்தனவே ;
காயா மரங்களெல்லாம்
காய்த்துச் சொரிந்தனவே ;
செந்நெல் விளைந்தனவே
தேசம் செழித்தனவே
பயிர்கள் விளைந்தனவே
பலனைக் கொடுத்தனவே ;
ஏர் கட்டி உழுவாரும்
இளநாற்று நடுவாரும் ;
பயிரிடும் குடிகளெல்லாம்
பலப்பட்டுப் போனார்கள் ;
ஓடுங் குடிகளெல்லாம்
ஊரைவந்து சேர்ந்தார்கள்.

பொருள் விளக்கம்

பொய்கை—குளம், மடுக்கள்—குளங்கள், ஆற்றிலுள்ள பள்ளங்கள். அடைபடும்—சேரும், கூடும். கழனி—வயல்.

கேள்விகள்

1. மழை பெய்ததனால் எவை எவை நிரம்பின ?
2. மரம் செடிகளில் காணப்பட்ட மாறுதல்கள் என்ன ?
3. உழவர் என்ன செய்தனர் ?

25. கோழி வளர்த்தல்

புதுமாதிரி	• கலவை	அயல்நாட்டு
இனங்கள்	போதிய	ஒரேமாதிரி
கழிவு	கொட்டடி	அடைகாக்க
விரோதிகள்	திறன்	உண்ணி
சராசரி	பாதுகாக்க	குடிசைத்தொழில்
கிருமிகள்		

[சுந்தரம் தன் நண்பன் முருகன் வீட்டிற்குப்போகிருன். அங்கே புதுமாதிரியான கோழிகளைப் பார்க்கிருன்.]

சுந்தரம் : முருக! இந்தக் கோழிகள் நாட்டுக் கோழிகளைப் போல் இல்லையே! இவை என்ன கோழிகள் ?

முருகன் : சுந்தரம், இவை நம் நாட்டுக் கோழிகள் அல்ல; இவை அயல் நாட்டு இனத்தைச் சேர்ந்தவை.

சுந்தரம் : இந்த இனக் கோழிகள் எல்லாம் ஒரே மாதிரியாக இல்லையே!

முருகன் : அயல் நாட்டுக் கோழிகளிலும் பல இனங்கள் உண்டு. அதோ, உருவத்தில் பெரியதாக ஒரு கோழி இருக்கிறது பார், அது 'ரோட் ஐலண்டு ரெட்ஸ்' என்னும் இனத்தைச் சேர்ந்தது. அதோ இருக்கும் வெள்ளை நிறமான கோழி 'லெக்கான்' எனப்

படும். அதோ இருக்கும் கறுப்பு நிறமான கோழி 'மைனர்க்கா' எனப்படும். இந்த இனத்தில் வெள்ளை நிறமான கோழிகளும் உண்டு. ஆனால் கறுப்பு மைனர்க்காவையே பலர் விரும்பி வளர்க்கிறார்கள்.



1. வெள்ளை லெக்கான்

2. ரோட் ஐலண்டு

3. கறுப்பு மைனர்க்கா

சுந்தரம்: முருக! உங்கள் வீட்டில் நம் நாட்டுக் கோழிகளை வளர்க்காமல் அயல் நாட்டுக் கோழிகளை ஏன் வளர்க்கிறார்கள்?

முருகன் : நம் நாட்டுக் கோழிகள் வருடத்தில் மூன்று முறையாக 30 முதல் 60 முட்டைகள் வரைத்தான் இடுகின்றன. அயல் நாட்டுக் கோழிகளோ வருடத்தில் 180 முட்டைகள்வரை இடுகின்றன. ஆகையால்தான் அயல் நாட்டுக் கோழிகளை வளர்க்கிறோம்.

சுந்தரம் : இந்த கோழிகளுக்கு என்ன தீவனம் போடுகிறீர்கள் ?

முருகன் : ஒவ்வொரு கோழிக்கும் காலையிலும் மாலையிலும் இரண்டு பிடித் தானியங்களைக் கொடுக்கிறோம். மாலையில் அவைகளுக்குக் கொஞ்சம் மோர் குடிக்கக் கொடுப்போம். தவிர புல் நுனிகளையும் வீட்டில் சேரும் காய்கறிக் கழிவுகளையும் அவைகளுக்குத் தீவனமாகப் போடுவோம்.

சுந்தரம் : என்னென்ன தானியங்களைத் தீவனமாகக் கொடுப்பீர்கள் ?

முருகன் : நெல், கேப்பை, கம்பு, சோளம் முதலிய தானியங்களைத் தீவனமாகக் கொடுப்போம். தானியங்களும் காய்கறிக் கழிவுகளும் மட்டும் தீவனமாகக் கொடுத்தால் போதாது. மீன், மாமிசம், கறையான் முதலியனவும், தவிர, பிண்ணுக்கு முதலியனவும் தீவனமாகக் கொடுக்க வேண்டும்.

சுந்தரம் : அந்தப் பாத்திரத்திலிருந்து அந்தக் கோழி எதையோ எடுத்துத் தின்கிறதே ; அது என்ன தின்னுகிறது ?

முருகன் : அந்தப் பாத்திரத்தில் சுண்ணும்புக்கல் தூளும், எலும்புத் தூளும் சேர்ந்த கலவை இருக்கிறது. அதைத்தான் கோழி தின்னுகிறது.

சுந்தரம் : அந்த மண் தொட்டியில் என்ன இருக்கிறது ?

முருகன் : அந்த மண் தொட்டியில் கோழிகள் குடிப்பதற்கு வேண்டிய சுத்தமான நீர் இருக்கிறது. கோழிகளுக்குப் போதிய நீர் ஏற்ற வேளைகளில் கிடைக்க நாம் வசதி அளிக்க வேண்டும். அவை போதிய நீர் குடிக்காவிட்டால் அவற்றின் உடல்நலம் கெடும் ; முட்டையிடும் திறனும் குறையும்.

சுந்தரம் : அது என்ன கூண்டு ?

முருகன் : அதுதான் கோழிகளை அடைத்து வளர்ப்பதற்கான கூண்டு. நாங்கள் நாலைந்து கோழிகள்தான் வளர்க்கிறோம். ஆகையால் இது போன்ற கூண்டு செய்து வைத்திருக்கிறோம். சிலர் முப்பது கோழிகள் வரை வளர்ப்பார்கள். அவர்கள் கோழிகளுக்காக ஒரு கூரை வேய்ந்த கொட்டடி அமைத்துக் கொள்வார்கள்.

சுந்தரம் : நான் ஒரு நாள் எங்கள் உழவனுடைய வீட்டிற்குப் போயிருந்தேன். அவனும் ஐந்தாறு கோழிகள் வளர்க்கிறான் ;



ஆனால் கோழிக்கூடு ஒரு திண்ணையில் அமைக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் சிறியதாயும் இருட்டாயும் இருக்கிறது.

முருகன் : இருட்டான அறைகளில் கிருமிகள் விருத்தியாகும். அவ்வித அறைகளில் வளரும் கோழிகளின் மீது பேன், உண்ணி முதலியன எளிதில் பற்றும். ஆகையால் எங்கள் வீட்டிலுள்ள கூண்டைப் போலக் கூண்டை அமைத்துக் கொள்ள வேண்டும். தவிர, தினமும் கூண்டைச் சுத்தம் செய்து கோழிகள் மீது பூச்சிகள் பற்றுது பார்த்துக் கொள்ளவேண்டும்.

சுந்தரம் : உங்கள் வீட்டில் கோழிகளை நன்றாக வளர்க்கிறீர்கள்.

முருகன் : கோழிகளைச் செவ்வனே வளர்த்தால்தான் லாபம் பெறமுடியும்.

சுந்தரம் : நானும் என் தந்தையிடம் சொல்லிச் சில கோழிகள் வாங்கி வளர்க்கப் போகிறேன்.

முருகன் : அவ்விதமே செய். கோழிகளை வளர்த்தல் ஒரு சிறந்த குடிசைத் தொழிலாகும்; இன்பமாகவும் நேரம் போக்கலாம்.

கேள்விகள்

1. அயல் நாட்டுக் கோழிகளில் சில இனங்களைச் சொல்.

2. நம் நாட்டுக் கோழிகளை வளர்ப்பதை விட அயல் நாட்டுக் கோழிகளை வளர்ப்பது நல்லது. ஏன்?

3. கோழிகளுக்கு என்னென்ன தீவனமாகக் கொடுக்கவேண்டும்?

4. கோழிகளுக்குப் போதிய நீர் குடிக்க கிடைக்கும்படி செய்வது ஏன் அவசியம்?

பயிற்சி

1. நண்பன்—இதே பொருள் தரும் வேறு இரண்டு சொற்கள் எழுது.

2. ஒரே மாதிரி, பெரிதாக, உண்டு, அதிகம், பலர்.—எதிர்ப்பதம் எழுது.

இலக்கணம்

நாங்கள் கோழிகளை வளர்க்கிறோம் சிலர் வளர்த்தார்கள். நீங்கள் வளர்க்கிறீர்கள். இவ்வாக்கியங்களிலுள்ள பெயர் வினைச் சொற்களை எடுத்தெழுதி, என்ன பால், என்ன காலம் என்று சொல்லவும்.

26. நோயற்ற வாழ்வு

வற்புறுத்துகிறது	பாய்ந்தது	துர்நாற்றம்
வடிகால்	திண்ணம்	சத்தான
சின்னஞ்சிறு	வலிமை	மென்று
சீராடுதல்	அமிர்தம்	நஞ்சு

1. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற வாக்கியம் தேக சுகத்தின் அவசியத்தை வற்புறுத்துகிறது. சுத்தத்தைக் கவனியாமல் ஒருவரும் சுகமாக இருக்க முடியாது. நம்முடைய உடம்பும், உடையும், வீடும் சுத்தமாக இருக்க வேண்டும்.

2. நல்ல வீட்டில் அழுக்குத் தண்ணீர் கழிந்து போவதற்கு வடிகால்கள் இருக்கின்றன அல்லவா? அப்படியே நமது உடம்பிலிருந்து கழிவான பொருள் வெளிப்படுவதற்காகத் தோல் முழுவதும் சின்னஞ்சிறு வடிகால்களாகிய துவாரங்கள் நிறைந்திருக்கின்றன. வீட்டிலுள்ள சாக்கடை வடிகால் அடைபட்டுப் போனால் வீட்டிலுள்ளவர்களுக்கு அது அசௌகரியத்தை உண்டு பண்ணும். அப்படியே நமது உடம்பிலுள்ள சிறு துவாரங்களை அழுக்கு அடைத்துக் கொண்டால், அது நமக்கு அசௌக்கியத்தை உண்டாக்கும்.

3. நமது உடம்பிலிருந்து கழிய வேண்டிய பொருள் நஞ்சுத் தன்மை வாய்ந்தது. இது வெளியாகாவிட்டால் நோய் உண்டாவது திண்ணம். உடற்பயிற்சி செய்வதாலும், நன்றாக அழுக்கைத் தேய்த்து நீராடுவதாலும், உடம்பிலுள்ள துவாரங்கள் வழியாய்க் கழிய வேண்டிய பொருள் கழிந்து கொண்டிருக்கும்.

4. உடம்பைச் சுத்தமாக வைத்துக் கொள்வது போல், உடையையும் வெளுத்துச் சுத்தமாக வைத்துக்கொள்வது அவசியமாகும். உடையைப் போல் படுக்கையும் தலையணைகளும் சுத்தமாக இருக்கவேண்டும். 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்பது பழமொழி.

5. வீட்டைச் சுற்றி அழுக்கு அடைய இடம் கொடுப்பதும், துர்நாற்றம் வீசும் பொருள்களைக் குவித்திருப்பதும் நோய்களுக்குக் கொண்டாட்டம் ஆகும். படுக்கை அறைகள் சுத்தமாகவும் நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ளவையாகவும் அமைந்திருக்க வேண்டும். நமது சுகவாழ்வுக்கு நல்ல காற்றும் சூரிய வெளிச்சமும் நல்ல தண்ணீரும் இன்றியமையாதன.

6. இவை தவிர நல்லுணவும் தேக சுகத்திற்கு மிகவும் அவசியமானது. சத்தான உணவை நன்ருக மென்று உட்கொள்ளுதல் வேண்டும். 'அளவுக்கு மிஞ்சினுல் அமிர்தமும் நஞ்சு' என்னும் வாக்கியத்தை நாம் ஒரு பொழுதும் மறந்துவிடக் கூடாது. பசி நன்ருக ஏற்பட்டபின் உணவு உட்கொள்வதே நலம்.

7. வேலை செய்யாதவர்களுக்கு நல்ல பசி உண்டாவதில்லை. உபயோகிக்கப் பெருத இரும்பு துரு ஏறிக் கெட்டுப் போவது போல் வேலை செய்யாத உடம்பும் நோய் அடைந்து கெட்டுப் போகும். சூரிய வெளிச்சமும் நல்ல காற்ருேட்டமுமுள்ள இடங்களில் நாம் ஒழுங்காக வேலை செய்து வரவேண்டும். இவ்வாறு செய்தால் நம் உடல் வலிமை பெறும்.

8. பிள்ளைகளே! தேக சுகம் அவசியம் என்பதை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காகத்தான் சுகாதார வாரம் நாடு எங்கும் கொண்டாடப் படுகின்றது.

கேள்விகள்

1. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்னும் பழமொழியின் அர்த்தம் என்ன?

2. நன்ருக அழுக்குத் தேய்த்து நீராட வேண்டிய அவசியம் என்ன?

3. 'கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு' என்னும் பழமொழி எதை விளக்குகிறது?

4. நாம் வசிக்கும் வீடுகளை எவ்விதம் வைத்துக் கொள்ள வேண்டும்?

5. 'சாப்பிடுதல்' சம்பந்தமாக ஒருவர் கவனிக்க வேண்டியவை யாவை?

6. உடற்பயிற்சி செய்வதால் ஏற்படும் நன்மைகள் என்ன?

பயிற்சி

1. நோயற்ற, அமைந்திருக்கவேண்டும்—பிரித்து எழுது.

2. படுக்கை — அறைகள், நாடு — எங்கும் — சேர்த்து எழுது.

3. உடல் சுகமும் வலிமையும் பெறும். இந்த வாக்கியத்தை இரண்டு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

4. கீழ்க்காணும் வினைச்சொற்கள் ஒவ்வொன்றும் என்ன காலத்தைச் சேர்ந்தது என்று சொல்.

படிக்கின்றான்	படித்தேன்	ஓடுகின்றது
நின்றேன்	படிப்பாய்	வருவான்
ஓடுவோம்	ஓடினாய்	சென்றாய்

27. வெ. ப. சுப்பிரமணிய முதலியார்

ஆராய்ந்து	கவிகள்	இயற்றி
உழைத்து	கால் நடை	பரிசீலனை
திறமை	அரசாங்கத்தார்	முதன்மையாக
பதக்கம்	இலாகா	படிப்படியாக
கொண்டாடி	ஆராய்ச்சி	விளக்கவுரை

1. பிள்ளைகளே! வெ. ப. சுப்பிரமணிய முதலியார் என்னும் பெரியார் தமிழ் மொழியை நன்கு ஆராய்ந்து அறிந்தவர்; பல நூல்கள் எழுதியிருக்கிறார்; பல கவிகள் இயற்றியிருக்கிறார்; தமிழ் வளர்ச்சிக்காக மிகவும் பாடுபட்டிருக்கிறார். இவ்விதம் தமிழுக்காக, தமிழ் மக்களுக்காக உழைத்து வந்த பெரியாரைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் அல்லவா?

2. வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் சொந்த ஊர் வெள்ளகால் என்பது. அது ஒரு சிறிய ஊர்; திருநெல் வேலி மாவட்டத்தில் உள்ளது.

3. முதலியார் அவர்கள் 1857-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 14-ந் தேதி பிறந்தார். அவர் பிறந்த குடும்பம் மிகவும் பெரியது; செல்வமும் சீரும் நிரம்பியது. ஆதலால் முதலியார் அவர்கள் குழந்தைப் பருவத்தில்

செல்லமாக வளர்க்கப்பட்டார்; பின்னரும் அவர் வசதியுடன் வாழ்ந்து வந்தார்.

4. முதலியார் அவர்கள் தம் இளமைப் பருவத்தில் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் கல்வி கற்ருர், பின்னர், சென்னையிலுள்ள கிறித்தவக் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்ருர். அக்காலத்தில் சைதாப்பேட்டையில் விவசாயக் கல்லூரி நடைப்பெற்று வந்தது. முதலியாரவர்கள் அக்கல்லூரியில் சேர்ந்து படித்தார். படிப்பு முடிந்ததும், ஆடு, மாடு, குதிரை முதலிய கால்நடைகளின் நோய்களைப் பரிசீலனை செய்து தீர்க்கும் 'இன்ஸ்பெக்ட'ராக நியமனம் பெற்ருர். அப்பொழுது அவருக்கு வயது இருபத்தெட்டு.

5. முதலியாரவர்கள் கால்நடை 'இன்ஸ்பெக்டர்' வேலையைத் திறமையுடன் நடத்தி வந்தார். ஆதலால் அரசாங்கத்தார் அவருக்கு அதிகப் பயிற்சி அளிக்க விரும்பினர். மிருக வைத்தியப் பயிற்சி பெறும் பொருட்டு அவர் பம்பாய்க்கு அனுப்பப்பட்டார். கால்நடைகளின் நோய்களைப் பற்றியும், அவைகளைக் குணப்படுத்துதல், பரவாமல் தடுத்தல் இவை பற்றியும் மிருக வைத்திய சாலையில் கற்பிக்கப்படும்.

முதலியாரவர்கள் அங்கே பயிற்சி பெற்று முதன்மையாகத் தேறினர்; அதற்குப் பல பரிசுகளும் பதக்கமும் பெற்றார்.

6. முதலியாரவர்கள் அரசாங்கக் கால் நடை இலாகாவில் கீழ்நிலைப் பதவியிலிருந்து தமது சொந்த முயற்சியாலும் திறமையாலும் படிப்படியாக உயர்ந்து, கால் நடை இலாகா 'டிபுடி சூப்பரின்டென்டெண்டு' பதவியும் பெற்றார். அரசாங்கத்தார் அவருடைய வேலைத் திறமையைக் கொண்டாடி அவருக்கு 'ராவ் சாகிப்' என்ற பட்டமும் வழங்கினர்.

7. முதலியாரவர்கள் கால்நடைகளுக்கு ஏற்படும் வியாதிகளைப் பற்றிப் பல நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள் மிகவும் சிறந்து விளங்குவது 'கால்நடைகளுக்கு வியாதி வராமல் காக்கும் பொருட்டு அம்மை குத்தல்' என்னும் நூலே ஆகும். அவர் கால்நடை 'டிபுடி சூப்பரின்டென்டெண்டு' பதவியைச் சுமார் நான்கு ஆண்டு காலம் வகித்து வந்தார். பின்னர் தமது 59-வது வயதில் ஓய்வுபெறும் பொருட்டு வேலையினின்றும் விலகினர். முதலியார் அவர்கள் தாம் உத்தியோகம் பார்த்து வந்த காலத்திலும் ஓய்வு பெற்ற பின்னரும் தமிழ் நூல்களை

ஆராய்ச்சி செய்வதிலும், எழுதுவதிலும் தமது ஓய்வு நேரத்தைப் போக்கி வந்தார். அவர்கள் 89 ஆண்டுகள் வாழ்ந்து 1947-ல் மறைந்தார்.

8. முதலியாரவர்கள் கம்பராமாயண சாரம், நெல்லைச் சிலேடை வெண்பா, கோம்பி விருத்தம், அகலிகை வெண்பா முதலிய நூல்களை இயற்றியுள்ளார். தமிழ் நாட்டுத் தமிழ்ப் பெரும் புலவர்களுள் முதலியார் அவர்கள் தனிச் சிறப்புப் பெற்றவர். பிள்ளைகளே! முதலியார் அவர்களைப் போல் நீங்களும் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றுப் புகழ் அடைவீர்களாக!

கேள்விகள்

1. வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் சொந்த ஊர் எது?

2. அவர் விவசாயக் கல்லூரியில் கற்றுத் தேர்ந்ததும் என்ன உத்தியோகம் பார்த்தார்?

3. அரசாங்கத்தார் அவரை ஏன் பம்பாய்க்கு அனுப்பினர்?

4. அவர் தமிழில் இயற்றியுள்ள நூல்களைக் கூறு.

பயிற்சி

1. சரியாகப் பொருத்து:

கழிந்த ஆண்டு — சொல்கிறேன்.
அடுத்த மாதம் — சென்றேன்.
இப்பொழுது — செல்வேன்.

2. நடத்தி வந்தார். இரண்டும் வினைச் சொற்கள். இவற்றின் வித்தியாசம் யாது ?

இலக்கணம்

1. வினைச் சொற்கள் மூன்று காலங்களில் வரும் எனப் படித்தீர்கள்.

நேற்று — இன்று — நாளை — என்ற சொற்கள் முறையே மூன்று காலத்தையும் குறிப்பவை.

அவன் நேற்றுப் படிப்பான் — இவ்வாக்கியம் சரியில்லை. ஏன் ?

நேற்று என்பது இறந்தகாலம். படிப்பான் என்பது எதிர்காலம்.

இவ்வாக்கியங்கள் சரியாக அமையவேண்டுமானால் நேற்றுப் படித்தான்: நாளைப் படிப்பான் என்று இவ்வாறு இரண்டு சொற்களும் ஒரே காலத்தைச் சேர்ந்தவைகளாக இருக்க வேண்டும்.

2. இவன் எப்படி இங்கே வந்தான்—இந்த வாக்கியத்தை கவனி. இவை—பெயர்ச்சொல். வந்தான்—வினைச் சொல். எப்படி, இங்கே என்ற சொற்கள் பெயரும் இல்லை, வினையும் இல்லை, எப்படி என்பது கேள்வியாகவும், இங்கே என்பது இடத்தைச் சுட்டுவதாகவும் வந்திருக்கின்றன. இச் சொற்கள் வாக்கியத்திலே வரும்போதுதான் அர்த்தம் தரும். இப்படிப்பட்ட சொல்லுக்கு இடைச்சொல் என்று பெயர்.

28. தைப் பொங்கல்

1. பொங்கல் இன்று பொங்கல்
புதுவருடப் பொங்கல்
மங்கலங்கள் பொங்க
மனையிலிடும் பொங்கல்.

2. சந்தனத்தைக் குழைத்துத்
தரையை மெழுகிடுவோம்;
சிந்தூரத்தால் கோலம்
சேர அதில் அமைப்போம்.

3. வாசமிக வீசும்
மலர் எடுத்து வருவோம்;
நேசமொடு தூவி
நின்று தொழுதிடுவோம்.

4. பச்சை மஞ்சள் இஞ்சி
படைபடையாய் வைப்போம்
இச்சை தரும் கரும்பும்
இடையிடையே நடுவோம்.

5. தங்கத்தினுல் பானை
தரளம் என அரிசி,
பொங்கலும் பால் பொங்கல்,
புத்தமுதப் பொங்கல்!

—கவிமணி.

குறிப்பு: மனை = வீடு
சிந்தூரம் = குங்குமம்
இச்சை = விருப்பம்
தரளம் = முத்து
புத்தமுதம் = புதுச் சோறு

29. வானொலி (அல்லது) இரேடியோ

தினம் தினம்	உடனுக்குடன்	பூஞ்சோலை
இரேடியோ	நிகழ்ச்சிகள்	இளைஞர்
தூரதேசம்	அவசியப்பொருள்	ஆராய்ச்சி

1. நீங்கள் வீடுகளிலும் பள்ளிக்கூடங்களிலும் பூஞ்சோலைகளிலும் இரேடியோ இருப்பதை அறிவீர்கள். ஒரு பெட்டி இருக்கிறது. அதில் இருக்கும் முள்ளைத் திருப்புவதனால் வெளியூர்களில் நடக்கும் இசை, பேச்சு முதலியவைகளைக் கேட்கிறீர்கள். திருச்சி, சென்னை, டெல்லி, பம்பாய் முதலிய நகரங்கள் நமக்கு மிகவும் தொலைவில் உள்ளன. அங்கெல்லாம் நடக்கும் நிகழ்ச்சிகளைத் தினம் தினம் கேட்டு மகிழ்கிறோம். இதனைக் கண்டு பிடித்தவர் யார் என்பதை நாம் அறிய வேண்டாமா?

2. இந்த அதிசயப் பெட்டியைக் கண்டு பிடித்தவர் மார்க்கோனி என்னும் பெரியார். இவர் இத்தாலி நாட்டில் 1874-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ம்தேதி பிறந்தார். இவர் இளைஞராய் இருக்கையிலேயே விஞ்ஞானத்தில் விருப்பமுள்ளவர். வீட்டிலே சிறிய விஞ்ஞானப் பெட்டிகளை வைத்து ஆராய்ச்சி செய்தார். 16-ம் வயதி

லேயே மின்சாரத்தைப் பற்றிய நுட்பங்களை யெல்லாம் அறிந்தார். அதன் பயனாக ஒலியை மின் அலைகளாக மாற்றி வானத்தின் வழியாக அனுப்பலாம் என்று கண்டறிந் தார். ஓரிடத்திலிருந்து ஒலி அலைகளை அனுப்பினால் அந்த ஒலியை, இன்னொரு இடத்தில் தக்க கருவிகளால் கேட்கலாம் என்று அறிந்தார். இரண்டு இடங்களுக்கு மிடையில் கம்பிகளில் இணைப்பு இல்லா மலே கேட்கலாம் என்பதுதான் இவர் கண்ட புதுமை. இதில் பல ஆண்டுகள் ஆராய்ச்சி செய்தார். இடைவிடாது உழைத் தார். அதன் பயனால் நாம் இன்று இரேடி யோவைக் கேட்டு மகிழ்கிறோம். இந்த வானொலி எப்படி வருகிறது? எப்படிக் கேட்கிறது? என்ற விவரங்களை மேல் வகுப் பில் படிப்பீர்கள்.

3. இரேடியோவால் நாம் பெறும் நன்மைகள் பல. நல்ல பாடகர்களின் பாட்டுக்களையும் இனிய நாடகங்களையும் கேட்டு மகிழ்கிறோம். பெரியோர்களின் சொற்பொழிவுகளைக் கேட்கிறோம். தூர தேசங்களில் நடக்கும் செய்திகளை உடனுக் குடன் நாம் அறிகிறோம். கப்பல், ஆகாய விமானம் இவைகளுக்கு விபத்து ஏற்பட்

டால் பூமியில் உள்ளவர்கட்குச் செய்தி அறிவிக்க வானொலி உதவுகிறது. இதனுல் பூமியிலுள்ளவர்கள் விரைவாகச் சென்று ஆபத்தில் சிக்கியவர்களுக்கு உதவிசெய்ய முடிகிறது. இவ்வாறு கல்விக்கும் பொதுமக்களுக்கும் இரேடியோ பல வழிகளிலும் உதவுகிறது. இந்தக் காலத்துக்கு இது ஒரு அவசியப் பொருளாக அமைந்து விட்டது.

4. இப்படிப் பல நன்மைகள் தரும் புதுமையைக் கண்டு பிடித்த மார்க்கோனி அவர்களுக்கு நாம் நன்றி செலுத்துவோம். அவர் பெயரும் புகழும் என்றும் வாழ்க.

கேள்விகள்

1. வானொலி கண்டுபிடித்தவர் யார்? அவர் எங்கு எப்பொழுது பிறந்தார்?

2. ஓரிடத்தில் உண்டாகும் ஒலியை இன்னொரு இடத்திலிருந்து கேட்பதில் மார்க்கோனி கண்ட புதுமை என்ன?

3. வானொலியால் உண்டாகும் நன்மைகள் யாவை?

இலக்கணம்

நாம் இனிய பாட்டுக்களைக் கேட்கிறோம். எழுவாய் பயனிலை செயப்படு பொருள்களைச் சொல்.

இத்தொடர் ஒரு வாக்கியம், இதில் நாம், இனிய, பாட்டுக்கள், ஐ, கேட்கிறோம் என்று ஐந்து சொற்கள் இருக்கின்றன.

நாம்—பெயரைக் குறிப்பது ; பெயர்ச் சொல்.

பாட்டுக்கள்—பெயரைக் குறிப்பது ; பெயர்ச்சொல்.

கேட்கிறோம்—செயல் செய்கிறதைக் குறிக்கிறது ; வினைச் சொல்.

ஐ—தனியாகப் பொருள் இல்லாதது. ஆனால் பாட்டுக்கள் என்ற சொல்லோடு சேர்ந்து அதனைச் செயப்படு பொருளாக மாற்றுகிறது. ஆகவே, வேற்றுமை உருபாக வருகின்ற இடைச் சொல்.

இனிய—இச்சொல் மேலே சொன்ன எவ்வகையிலும் சேரவில்லை. இது பாட்டுக்கள் என்ற பெயரைச் சிறப்பித்து வருகிறதல்லவா? இப்படி ஒரு சொல்லைச் சிறப்பித்து வருகின்ற சொல் உரிச்சொல் எனப்படும்.

பெயர்ச் சொல்லைச் சிறப்பித்து வரும் சொல் பெயர் உரிச்சொல் என்றும், வினைச் சொல்லைச் சிறப்பித்து வரும் சொல் வினை உரிச்சொல் என்றும் சொல்லப்படும்.

அவன் பாட்டை நன்றாகக் கேட்டான்—இதில் நன்றாக என்ற உரிச்சொல் கேட்டான் என்ற வினைச் சொல்லைச் சிறப்பித்து வந்திருக்கிறது-வினை உரிச்சொல்.

30. ஔவையாரும் அதியமானும்

நாடகம்

பரபரப்பு	நாட்டாசை	முரசொலி
படைகள்	வீரப்பெண்கள்	போர்முரசு
சமாதானம்	வீண்முயற்சி	சிந்தித்து

காட்சி 1

இடம்: அதியமான் அரண்மனை.

இருப்போர்: அதியமான், அரசி, ஔவை, அமைச்சர் முதலானோர்.

அதியமான்: அம்மையே! நான் வருகிறேன். நான் திரும்ப வரும் வரையிலும் தாங்கள் இங்கேயே இருக்கவேண்டும்.

ஔவை: அரசே! ஏன் இவ்வளவு அவசரம்! ஏன் இவ்வளவு பரபரப்பு!

அதியமான்: தொண்டைமான் போருக்கு இழுத்திருக்கிறான். படைகள் தயாராகி விட்டன. (மனைவியைக் காட்டி) நான் வெற்றி பெற்று வரும்வரை இவளுக்கு உதவியா யிருங்கள்.

ஔவை: அரசே! ஆத்திரப் படவேண்டாம். சமாதானத்துக்கான வழியைத் தேடுகிறேன்.

அதியமான்: அம்மையே! தாங்கள் என் மீதுள்ள அன்பினுல் ஏதோ சொல்லு கிறீர்கள். நாட்டாசை பிடித்த தொண்டைமான் ஒரு நாளும் சமாதா னத்தை விரும்பமாட்டான். அமை திக்கும் அவனுக்கும் வெகுதூரம். போருக்கு வருவது உறுதி. தாங்கள் வீண் முயற்சி செய்யவேண்டாம்.

ஔவை: முயற்சி செய்துதான் பார்ப் போமே.

அரசி: அம்மா! தங்கள் பெருமை அவ னுக்குத் தெரியாது. "தீயாரைக் காண் பதுவும் தீது" என்று தாங்கள் தானே சொன்னீர்கள். அவனைக் காண்பதை விட அழிப்பதே மேல். அஞ்சா நெஞ் சமும் வீரமும் பெற்ற நம் மன்னர் தோல்வி பெறமாட்டார். வெற்றி உறுதி. தாங்கள் வாழ்த்தி அனுப்புங்கள்.

ஔவை: அதியமான் மனைவிக்கு வீரம் இல்லாமலா போகும். அம்மா உன் போல வீரப் பெண்கள் வாழும் நாடு என்றும் அழியாது. ஆயினும், நாட்டில் சண்டை நடவாமல் இருப்பது நல்ல தல்லவா? சண்டை என்ருல் ஒரு பாவமும் அறியாத எத்தனைபேர்

இறப்பார்கள். நானே தொண்டைமானிடம் தூது செல்கின்றேன். போரை நிறுத்தி விடுகிறேன்.

அரசி : பலன் கிடைக்கவில்லையானால் !

அதியமான் : போர் இருக்கவே இருக்கிறது. அதிருக்கட்டும் அம்மையே ! நான் பயந்து விட்டேன் என்று எனக்குப் பழி வரும்படி செய்து விடாதீர்கள்.

ஔவை : அரசே ! உனக்குப் பழியா ? அது இவ்வுலகில் என்ருவது ஏற்படுமா ? ஏன் இந்தச் சந்தேகம். உன் பெருமைக்கு என்றும் குறைவு இல்லை. அரசே ! வாழ்க. இருங்கள். நான் சென்று வருகிறேன்.

அதியமான் : அமைச்சரே ! அம்மையார் பிரயாணத்திற்கு வேண்டியவற்றைச் சீக்கிரம் செய்யுங்கள்.

[காட்சி முடிகிறது]

காட்சி 2

இடம் : தொண்டைமான் அரசவை.

[அரசனும் அமைச்சர்களும் பேசிக் கொண்டிருக்கிருர்கள். ஔவை வருகிருள்.]

தொண்டைமான் : [எழுந்து] அம்மையே வருக ! வணக்கம்.

ஔவை : அரசே வாழ்க! வாழ்க நின் குலம்! வாழ்க நின் அரசு!

தொண்டைமான் : [இருப்பிடத்தைக் காட்டி] அமருங்கள். [அனைவரும் உட்காருகிறார்கள்] அம்மையே தாங்கள் வருவது தெரிந்திருந்தால் தக்க வசதி செய்திருப்பேன்.

ஔவை : நன்றி, வீணாக நான் யாருக்கும் தொல்லை கொடுப்பதில்லை. நடந்து செல்வதுதான் எனக்கு மகிழ்ச்சி. வழி எல்லாம் இயற்கையைக் கண்டு மகிழலாம். [முரசொலி கேட்கிறது]

இதென்ன முரசொலி! போர்முரசு போல் கேட்கிறதே.

தொண்டைமான் : வீரர்களைச் சிலம்பக் கூடத்திற்கு அழைக்கும் அறிவிப்பு. பயிற்சிக் கூடத்தையும் ஆயுதசாலையையும் பார்த்து வருவோமே!

[செல்கிறார்கள்.]

காட்சி 3

இடம் : ஆயுதசாலை.

தொண்டைமான் : அம்மையே பார்த்தீர்களா! எனது ஆயுதங்களை! இது தெரியாமல் அதியன் ஏதோ என்னிடம் அறியாப்

பிள்ளைபோல் போருக்குப் புறப்படுகிறான்.

ஔவை : அரசே! உண்மைதான்; உன்னுடைய ஆயுதங்கள் எவ்வளவு பளபளப்பு! எவ்வளவு கூர்மை! கொஞ்சங்கூட மழுங்கவில்லை. மாலை போட்டு நெய்பூசி வைத்திருக்கிறாய். பாவம்! அதியன் ஆயுதங்கள் சண்டைக்குச் சென்று பிடிமுறிந்து விட்டன; கூர்மை மழுங்கி விட்டன; உலைக்கூடத்தில் செப்பனிடுவதற்காகப் போட்டிருக்கிறான்.

தொண்டைமான் : அம்மையே! என்னைப் புகழ்வதுபோலக் கேலி செய்கிறீர்கள். என் வீரமும் படைப் பெருமையும் அதியனுக்குத் தெரியாது.

ஔவை : உண்மைதான் அரசே! அவன் வீரம் போரிலேதான் பேசும். அது இருக்கட்டும். நீங்கள் இருவரும் சண்டையிடுகிறீர்கள். அதில் எத்தனை பேர் மடியப் போகிறார்கள். எவ்வளவு பொருள்கள் சேதம் என்பதைச் சிந்தித்துப்பார். சமாதானமாக வாழ்ந்தால் உங்களுக்கும் நன்மை. நாட்டுக்கும் நன்மை. ஒற்றுமை உயர்வு தரும்

என்பதை மறந்து விட்டாயே. தமிழ் நாட்டு மன்னர்கள் சகோதரர் போல் வாழவேண்டாமா ?

தொண்டைமான் : அம்மையே ! உணர் கிறேன். பொருளுக்கும் உயிருக்கும் அழிவு ஏற்படும் போரைப்பற்றி நான் இனி எண்ணவே மாட்டேன். ஆனல் ஒன்று ; அதியன் நாட்டாசையால் என் மீது போருக்கு வந்தால்...

ஔவை : அரசே! கவலை வேண்டாம். அதற்கு நான் பொறுப்பு. நீங்கள் இரு வரும் நண்பர்களாக வாழவேண்டும். தமிழ் நாட்டுப் பெருமையை மற்றவர் அறியவேண்டும். எனக்கு மதிப்புத் தந்ததற்காக உனக்கு நன்றி. வாழ்க அரசே! வருகிறேன்.

(காட்சி முடிகிறது)

கேள்விகள்

1. தொண்டைமான் எப்படிப்பட்டவன் என்று அதியமான் சொன்னன் ?

2. நடந்து செல்வதால் ஔவைக்கு என்ன நன்மை ?

3. ஔவையிடம் அதியமான் ஏன் வீண் முயற்சி வேண்டாம் என்று சொன்னன் ?

4. ஆயுதசாலையைக் கண்ட ஔவை என்னென்ன சொன்னாள் ?

5. அதியமான் வீரத்தைத் தொண்டைமானிடம் ஔவை எவ்வாறு தெரிவித்தாள் ?

பயிற்சி

இந்த நாடகத்தை மாணவர்கள் நடித்துப் பழக வேண்டும்.

இலக்கணம்

நடந்து செல்வதுதான் எனக்கு மகிழ்ச்சி.

வழி எல்லாம் இயற்கையைக் கண்டு மகிழலாம்.

இவ் வாக்கியங்களிலுள்ள சொற்களை எடுத்து என்னென்ன சொற்கள் என்று சொல்.

செய்யுட் பகுதி

வெற்றி வேற்கை

1. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்.
2. கல்விக் கழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
4. மன்னர்க் கழகு செங்கோல் முறைமை.
5. மந்திரிக் கழகு வரும் பொருள் உரைத்தல்.
6. தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை.
7. உண்டிக் கழகு விருந்தோ டுண்ணல்.
8. பெண்டிர்க் கழகு எதிர் பேசாதிருத்தல்.
9. அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
10. வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை.
11. தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம் பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழ லாகாதே.
12. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
13. பெரியோ ரெல்லாம் பெரியரும் அல்லர்.
14. சிறியோ ரெல்லாம் சிறியரும் அல்லர்.
15. பெற்றோ ரெல்லாம் பிள்ளைகள் அல்லர்.
16. உற்றோ ரெல்லாம் உறவினர் அல்லர்.
17. அடினும் ஆவின்பால் தன் சுவை குன்றாது.

18. சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.
19. அரைக்கினும் சந்தனம் தன்மணம் அருது.
20. புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.
21. கலக்கினும் தண்கடல் சேருகாதே.
22. ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.
23. நூருண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.
24. பெருமையும் சிறுமையும் தான்தர வருமே.
25. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோரரயின் பொறுப்பது கடனே.
26. சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே.
27. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.
28. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.
29. நாற்பாற் குலத்தில் மேற்பா லொருவன்
கற்றில ஞயிற் கீழ்இருப் பவனே.
30. எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றேரை வருக என்பர்.
31. அறிவுடை யொருவனே அரசனும் விரும்பும்.

வெற்றிவேற்கை நறுந்தொகை என்றும் கூறப்படும்.

வாக்குண்டாம்

பிறர்க்குப் பயன் கருதாமல் உதவி செய்

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டாம்—நின்று
தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால். 1

நல்லார்க்குச் செய்த உதவி

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர். 2

*மேன் மக்கள் தன்மை

அட்டாலும் பால் சுவையில் குன்றுது அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 3

அறிவு, செல்வம், குணம் அமைதல்

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத் தளவே யாகுங் குணம். 4

நல்லார் நட்பு

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று. 5

தீயோர் நட்பு

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார் சொல் கேட்பதுவும் தீதே—தீயார்
குணங்கள் உரைப்பதுவுந் தீதே ; அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது. 6

உருவு கண்டு மதித்தலாகாது

மடல் பெரிது தாழை மகிழ் இனிது கந்தம்
உடல் சிறியர் என்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரும் ஆகாது அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகிவிடும். 7

ஒருவரால் எல்லார்க்கும் நன்மை

நெல்லுக் கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை. 8

துணையின் பெருமை

பண்டு முளைப்பது அரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்—கொண்டபேர்
ஆற்றலுடையார்க்கும் ஆகாது அளவின்றி
ஏற்ற கருமம் செயல். 9

மரத்திற்குச் சமமானவர்

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்லமரங்கள்—சபை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டாதவன் நல் மரம். 10

கல்லாதவன் நடித்தல்

கான மயிலாடக் கண்டிருந்த வான் கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானும்தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே
கல்லாதான் கற்ற கவி. 11

தீயோருக்குச் செய்த உதவி

வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக்கு ஆகாரம் ஆனாற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின் மேலிட்ட கலம். 12

அடக்க முடையார் தன்மை

அடக்க முடையார் அறிவிலர் என்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டாம்—மடைத் தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடியிருக்குமாம் கொக்கு. 13

உண்மை உறவினர்

அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவை போல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறைவார் உறவு. 14

மேலோர் கெட்டாலும் மேலோரே

சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்று
அல்லாதார் கெட்டாலங்கு என்னாகும்—சீரிய
பொன்னின் குடம் உடைந்தால் பொன்னாகும் என்னாகும்
மண்ணின் குடம் உடைந்தக் கால். 15

இப்பாடல்களைப் பாடியவர் ஔவையார். இப்பாடல்கள் மூதுரை என்றும் சொல்லப்படும்.

420

15/5.65-2

[விலை 60 nP